MASTER NEGATIVE NUMBER

6151.64

தனவைசிய ஊழியன்

மலர் 4, இதழ் 40

June 24, 1924

Record no. 148

Taṉavaiciya ūḻiyaṉ

Malar 4, itaḻ 40

June 24, 1924

Record no. 148

உ

சிவமயம்

சென்னைப் பதிவு எண் ௧௫௦௯.

தந்தி விலாசம்:—[illegible]

தனவைசிய ஊழியன்

தனவைசிய ஊழியர் சங்கத்தினின்று
செவ்வாய்க்கிழமை தோறும் வெளி வருவது.

ஆசிரியன் :—ராய. சொக்கலிங்கன்.

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்—திருக்குறள்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்—திருக்குறள்.

மலர் ௪. காரைக்குடி ரக்தாக்ஷி௵ ஆனி-மீ ௧௧-௨ (௨௪—௬—௧௯௨௪) இதழ் ௪௦.

ஸ்ரீமந் நாதமுனிகள்.

பெருமை.

திருவாய்மொழிமுதலிய திவ்யப்ரபந்தங்கள் நாலாயிரமும் வெளி வருவதற்கும் பரவுவதற்கும் காரணபூதரான இப்பெரியாரது சரிதச்சுருக்கத்தை யெழுத இன்று எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்பெரியார் முயன்றிராவிடின், ஸ்ரீ வைஷ்ண மதத்தைத் தென்னாட்டவர் உணர்ந் துய்வதற்குச் சுலபமான மார்க்கமொன்று அமையப் பெற்றிராதென்பது எமது அபிப்பிராயம். இப்பெரியாரை வைஷ்ணவர்கள் தமது ஆசார்ய பரம்பரையிற் சேர்த்தே தினம் அநுசந்தித்துக் கொண்டுவருகின்றார்கள்.

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்
நாத யாமுந மத்யமாம்
அஸ்மதா சார்ய பர்யந்தாம்
வந்தே குரு பரம்பராம்.

என்பது குருபரம்பரைத்துதி. இது ஸ்ரீமத் கூரத்தாழ்வாரால் அருளிச் செய்யப்பெற்றுள்ளது. இதில் நாதமுனிகள் நடுவிற் கொண்டாடப் பெற்றிருக்கிறார்; காண்க.

இவரது காலம்.

நமது நாதர் கலியுகம் ௩௯௮௪-ல் சோபகிருது வருஷம் ஆனி மாதம் புதன் நாளில் காட்டுமன்னார்குடி யென்று அழைக்கப்படும் வீரநாராயணபுரத்தில் அவதரித்தார். இவரது பரம்பரைப் பெரியோர்கள் யோக சாதனம் கைவரப்பெற்று யோகிகளாகவே வளர்ந்து வாழ்ந்திருந்ததாகத் தெரிகின்றது. இப்பெரியாரும் நிஷ்டை கைவரப்பெற்றவர். இவர், ௩௪௦ வருஷங்கள் ஜீவித்திருந்ததாகக் குருபரம்பரை சொல்லுகின்றது. இவர் தலைமைவகித்த பேரவையில், கம்பநாட்டாழ்வார் அருளிச்செய்த (கம்ப) ராமாயணம் அரங்கேற்றப்பட்டதாகக் கர்ணபரம்பரைக் கதையொன்று கூறுகின்றது. அதனால் இவர் கம்பர் காலத்திருந்தாரெனக் கொளற்கு இடமிருக்கின்றது. இப் பொருத்தங் காணுமோ வென்று சந்தேகித்தல் வேண்டாம். கூறுவோம்.

கம்பநாட்டாழ்வார், சடையப்பர் என்று பிரஸித்தி பெற்றிருந்தாரொருவள்ளல் காலத்திலிருந்தாரென்பதைக் கம்பராமாயணம் பத்து நாவினைக்கொண்டு பறைபடித்துக் கொண்டிருக்கின்றது. இவ்வள்ளல் சாலிவாஹன சகாப்தம் ௮௦௭ ல் இருந்திருக்கிறரென்பதைக் கம்ப ராமாயணப்பாயிரப் பாசுரமாகிய, "எண்ணிய சகாத்த மெண்ணூற்றேழின் மேற் சடையன் வாழ்வு" என்னும் செய்யுள் வற்புறுத்திக் கொண்டேயிருக்கிறது. இங்கு சகாத்தம் என்றது சாலிவாஹன சகாத்தத்தையே என்பது பெரியோர் துணிபு.

கலி ௩௧௮௦க்கு மேல் சாலிவாஹன ஸகம் தோன்றிற்று என்பர்; சடையன் வாழ்வுக்காலமாகத் துணியப்பெற்ற சகம் ௮௦௭-ஐ இக்கலியாண்டுடன், சேர்த்துக் கணக்கிட கலி ௩௯௮௭ ஆண்டாகின்றது. இது சடையன் காலம்; அதாவது சடையப்பவள்ளலாருடைய முதுமைப் பருவமாகவும் கம்பரது நடுத்தரப் பருவமாகவும் கொள்ளக்கிடைக்கின்றது. எனவே, அப்பாயிரச் செய்யுளின்படி கம்பர் ராமாயணம் இயற்றியருளிய காலம் கலி ௩௯௮௭ எனவும் பன்னிரண்டாண்டுகள் கழித்தே அவ்விராமாயணம் ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றப்பட்டது எனக் கேட்கப்படுதலால், கம்பர் ராமாயணம் அரங்கேற்றிய காலம் கலி ௪௦௦௦ எனவும் தெளிவாகின்றது. குருபரம்பரைப்படி கலி ௩௯௮௪ ல் பிறந்து யோகவன்மையால் ௩௪௦ ஆண்டுகள் ஜீவித்திருந்த நமது நாதமுனிகள் கலி ௪௦௨௪ வரை வாழ்ந்திருந்தார் எனத்தெரிவதால், கம்பராமாயணம் அரங்கேற்றிய காலமாகிய கலி ௪௦௦௦த்தில் அதற்குத் தலைமை வகித்திருந்த ஸ்ரீமந் நாதமுனிகள்தமது ௩௧௯ வது வயதாகிய கிழப்பருவத்தில் இருந்தனரென்பது வெளியாகின்றது. ஆகவே, நமது நாதர் கம்பர் காலத்திலிருந்தாரென்பதில் யாதும் தட்டில்லை. இதனை விரிக்க வேண்டிய அவசியம் நேர்ந்தபடியால் விரித்தோம். இனி சரிதத்திற்புகுவோம்.

பிறப்புவளர்ப்பு.

நமது சரித நாயகர், வீரநாராயணபுரத்தில் பரம்பரை யோக சிஷ்டராக இருந்த ஈச்வர முனிகள் என்பார்க்குப் புதல்வரைப் பிறந்த நாதரெனப் பிள்ளைத் திருநாமம் பெற்றுக் கருவிலே திருவுடையராய்த் திகழ்ந்து, அந்தணர் குலத்துக்கேற்றவாறு விதிமுறை வழுவாமல் ஐந்தாம் ஆண்டிலேயே கற்றலிற் புகுந்து, அபாரஞானமும் ஆராய்ச்சித்திறனும் அரியின்பாலாழ்ந்த பக்தியும் அடக்கமும் பொறையும் வாய்க்கப்பெற்று, அரவிந்தப்பாவை யெனுமாதை விதிப்படி மணந்து, இல்லறத்தை யினிது நடாத்தி, ஈச்வரமுனிகள் என்னும் ஓர் புதல்வரைப் பெற்று வளர்ந்து வாழ்ந்து வந்தனர்.

தமது புதல்வர் ஈசுவர முனிகட்குத்தக்க வயது வந்தபின், குடும்பயோகக்ஷேமங்களை யவரிடம் ஒப்பித்து, யோக நிஷ்டராகவும் விருத்தராகவும் ஆரியபக்தராகவும் இருந்து வாழ்ந்துவந்த நமது நாதர், திவ்ய தேச யாத்திரை சென்று திரும்பி வந்து தமது ஊரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் மன்னனுக்குக் கைங்கர்யம் செய்துக் கொண்டிருந்தார்.

இவரது நோக்கம்.

ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த உண்மைகளைத் தென்னாட்டிற் பரவச்செய்து பயனடைந்த சுலபவழியை யாழ்வார்கள், கண்டு அதன்படியேஅக்கொள்கையைப்பரவச் செய்தாரென்றும், அதற்கு மிகச் சுலப ஸாதனமாக அமைந்திருந்தது, அவ்வாழ்வார்கள் மலர்ந்தருளிய அருளிச் செயல்

தொகுதியே யென்றும் பெரியோராற் கேட்டுணர்ந்திருந்த நம் நாதமுனிகள் பல்லாண்டுகளாக அருகி மறைந்துகிடக்கும் அவ்வருளிச்செயல்களாகிய திவ்யப்பிரபந்தங்களை வெளிக்கொணர்தற்கு யாது வழியென, பகீரதனைப்போற் பல நாட்களாக பிரயத்தனம் செய்துகொண்டிருந்தார். தவவன்மையுடையாராதலால், இவரது உள்ளத்தில் ஊறிக்கிடந்த உறுதியான எண்ணத்தைத் தலைக்கட்டுதற்கு பகவான் திருவுள்ளம் வைத்தருளினார்.

“எண்ணிய எண்ணியாங்
கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்”

என்னும் இந்த உறுதி பொய்க்குமோ?

அருளிச்செயலமுதம்.

ஒருகால், கும்பகோணம் என்னும் பெயருடைய திருக்குடந்தை யென்னும் க்ஷேத்திரத்திருந்துவந்த, சில யாசக வேதியர்கள், இவரது கிருஹத்தினுள் நுழைந்து பின்வரும் அருளிச் செயலமுதப் பாசுரத்தைப் பாடினர்.

“ஆரா வமுதே! யடியே னுடலம்
நின்பா லன்பாயே
நீரா யலைந்து கரைய உருக்கு
கின்ற நெடுமாலே!!
சீரார் செந்நெல் கவரி வீசும்
செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்
கண்டே னெம்மானே!!!”

என்னும் அழகிய பாசுரத்தை யினித்த குரலுடனும் திருத்தச் சொற்களுடனும் தேவகானத்திற்பாடினர்.

இயற்கையாகவே தேவகானப் பிரியரும் அத்தேவகானச் செவ்விகளை யாராய்ந்து தெரிந்தவருமாகிய நம் நாதமுனிகள், இப்பாசுரப் பயனைக வெளியே போந்து, அவ்வேதியர்களை நன்கு உபசரித்து, அதனைப் பற்றிய விவரங்களைக் கேட்டனர். அவர்கள் அவ்விவரங்கள் முற்றும் சொல்லத் தெரியாதவராக இருக்க, அவர்களுடன் நாதமுனிகள் திருக்குடந்தைக்குச் சென்று அங்குள்ளவர்களால் இப்பாசுரமும் அதனுடன் பாடப்பெற்ற ஒன்பது பாசுரங்களும் திருக்குருகூர் நாதன் நம்மாழ்வார் செய்தருளிய திருவாய் மொழியாயிரத்தின் ரு.ம் பத்து அந்திருவாய் மொழியின் பத்துப் பாசுரங்களென்பதை யப்பெரியார்கள் சொல்லிய பின் வரும்,

“உழலை யென்பின் பேய்ச்சி
முலையூ டவளை யுயிருண்டான்
கழல்க ளவையே சரணாகக்
கொண்ட குருகூர்ச் சடகோபன்
குழலின் மலியச் சொன்ன
ஓரா யிரத்து ளிப்பத்தும்
மழலை தீர வல்லார்
காமர் மானேய் நோக்கியர்க்கே”

என்னும் பதினொன்றாம்பாசுரத்தா னறிந்து தெளிந்து, திருக்குருகூர் நகரேற எழுந்தருளினர்.

ஆழ்வார் அநுக்ரகம்.

ஆழ்வார் திருநகரி யென்ற திருப்பெயருடைய அத்திருநகரியி லெழுந்தருளியுள்ள பெரியோரைக் கேட்கவும், அவர்களும் அப்பூர்ண விவரம் தெரியாதவராக இருந்தனர்.

கலி பிறந்த சுடும் நாளில் திருவவதரித்து இருபத்தைந்தேயாண்டு இந்நிலவுலகிலிருந்த புகழெய்திய நம்மாழ்வாரைப் பற்றிய முழு விவரமும், அம்பிரானிருந்தும் வேதபாஹ்ய மதங்களதிர்ச்சியினால் வெம்பிப்பட்டழிந்த அருளிச் செயலமுதத்தின் விவரமும் கலி நாலாயிரத்தாண்டில் எங்ஙனம் தெளிதல் கூடும்? இது நம் நாதருக்கு மிகுந்த சிரமசாத்தியமாக இருந்தது. இப்படிச் சிரமத்துடன் விசாரித்துக் கொண்டிருக்கையில், அந்நகரிப் பத்தர்பெரியார் பராங்குச தாசரென்பவருடன், நமது நாதருக்கு நீண்ட சம்பாஷணை நிகழ்ந்தது. அந்த சம்பாஷணையின் பயனைப் பின்வரும் விஷயங்கள் புலனாயின. “திருவாய்மொழி யென்று கேட்டதுண்டு; அவற்றை ஓதியும் கேட்டுமறியோம்; ஆயினும் எங்கள் சம்பிரதாயமாக ஆழ்வார் விஷயமாய் அருளிச் செய்யப்பட்ட **கண்ணிநுண் சிறுதாம்பு** என்னும் பத்துப் பாசுரங்களையும் கஉ௦௦ முறையோதின் ஆழ்வார் (நம்மாழ்வார்) பிரத்தியக்ஷமாவர் என்னும் செய்தி வழங்குவதுண்டு” என்னும் செய்தி யெட்டியது.

யோகவினையிற் கைவந்தவராகிய ஸ்ரீமந் நாதமுனிகள், அப் பத்துப் பாசுரங்களையும் முலற்யே கஉ௦௦ முறை யோதித் தம்மை மறந்து யோகு செய்துஇருந்தனர்.

ஆழ்வார், அவ் யோகத்துக்கு வசப்பட்டவராகிக் காட்சிகொடுத்தருளினர். முனிகள் வேண்டினவையாகிய தம்மால் அருளிச் செய்யப்பெற்றிருந்த ௪௦௦௦ பாசுரங்களையேயன்றி, மற்றை யாழ்வார்கள் பாடியருளியிருந்த மூவாயிரங்களையும் அநுக்ரகித்தருளினர். ஸ்ரீமந் நாதமுனிகள், “கடர் சடைந் தமுதங்கண்டேன” அப்பாசுரங்களனைத்தையும் ஏடுசோத்தி யருளினர்.

பிரபந்தம் பாவியது.

ஆழ்வார் அவ்வகை யருளிச்செய்து மறைந்த பின்னர், ஸ்ரீமந்நாதமுனிகள் மிக திருப்தராகி, அந்நகரியிற் சிலர்க்கும் அவ்வமுதானவைகளைப் [illegible], ஸ்ரீரங்கம் சென்று, நம்மாழ்வார்விஷயமாகத்திருவத்யயனோத்ஸவம் (மார்சழித் திருநாள்) நடப்பித்து, ஆங்கும் அவ்வமுத வருஷங்களைப் பெய்து, திருக்குடந்தைக்கு எழுந்தருளி நம்மாழ்வாரைப் பிரதிஷ்டை செய்வித்து, ஆராவமுதாழ்வாரெனப் பெருமாளுக்குத் திருநாமம் இடச்செய்து, ஆங்கும்அமுதவாரியைத்தெளித்து, அங்கிருந்து வீரநாராயண புர மென்கிற தமது நகருக்கு எழுந்தருளிக் கீழையகத் தாழ்வான் மேலையகத்தாழ்வான் முதலிய பக்தர்கட்கு நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தைக் கற்பித்தருளினர். இங்ஙனம், ஸ்ரீமந் நாதமுனிகள் என்னும் நீருண்ட கார்மேகத்தால், தென்னாட்டிலுள்ள வைணவக் குளங்கள் முதலிய நீர்நிலைகளெல்லாம் அருளிச்செயலமுதவாரி பொழியப்பெற்று, பொங்கிப்பெருகிப் புஷ்கலமாயிற்று.

திவ்யப் பிரபந்தத் திருமுறை.

இந்தப் பிரபந்தங்கள், திருப்பல்லாண்டு பெரியாழ்வார்திருமொழி திருப்பாவை நாச்சியார்திருமொழி பெருமாள்திருமொழி திருச்சந்தவிருத்தம் திருமாலை திருப்பள்ளியெழுச்சி அமலனாதிபிரான் கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் பிரபந்தங்கள் பத்தும் **முதலாயிரமும்**, பெரியதிருமொழி திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம் என்னும் மூன்று பிரபந்தங்கள் அடங்கியது **இரண்டாவது ஆயிரமும்**, முதல் திருவந்தாதி இரண்டாந்திருவந்தாதி மூன்றாந்திருவந்தாதி நான்முகன் திருவந்தாதி திருவிருத்தம் திருவாசிரியம் பெரியதிருவந்தாதி திருவெழுகூற்றிருக்கை சிறியதிருமடல் பெரியதிருமடல் என்னும் பத்துப் பிரபந்தங்களும் அடங்கியது **மூன்றாவது ஆயிரமும்**, (இது இயற்பாவென்பது) திருவாய்மொழி என்னும் **நான்காவது ஆயிரமும்** ஆக, முறைவகுக்கப்பட்டிருக்கின்றன. இம்முறைவைப்புக்குக் காரணமும் பின்னே குறிக்கப்படுகின்றன.

திருப்பல்லாண்டுமுதல் அமலனாதிபிரான் ஈறுனவைபிரணவார்த்தங்களாகையால் முதலில் வைக்கப்பட்டன வென்றும், கண்ணிநுண் சிறுத்தாம்பு நம: சப்தார்த்தத்தை விவரிப்பதால் அவற்றின் பின்பு வைக்கப்பட்டது என்றும், பெரிய திருமொழி முதல் பெரியதிருமடல் வரையிலுள்ள பிரபந்தங்கள் மந்த்ரசேஷமான நாராயண சப்த விவரணமாகையாலே அதன்பின்பு வைக்கப்பட்டன வென்றும், இவ்வாறு திருமந்த்ரார்த்தப் பிரதிபாதகங்களான பிரபந்தங்கள் வைக்கப்பட்டபின் த்வயார்த்தப் பிரதிபாதகங்களாய்த்தீர்க்க சரணாகதியா யிருக்கப்பெற்ற ஸாரதமமான திருவாய்மொழிஎல்லாவற்றுக்கும்உயர்வானதாக அவற்றின் பின்னே வைக்கப்பட்டனவென்றுஞ்சொல்வர், ஸ்ரீமந் நாதமுனிகள் தமது தேவகான வல்லமையால், கண்ணிநுண் சிறுத்தாம்பைக்கொண்டு மறைந்து கிடந்த திவ்யப் பிரபந்தங்களை வெளிப்படுத்தின தன்மையில், நம்மாழ்வாரிடத்திலே யுபதேச மாகத் தாம் பெற்றபோது, மேற்குறித்தவாறே நாலாயிரங்களையும் முறைவைப்பாகப் பெற்றனரென்றும் பெரியோர் சொல்கிறார்கள்.

இவற்றின் விசேஷமுறை.

திருக்கோயில்களில் உத்ஸவம் கண்டருளும்போது, எம்பெருமான் நடுவே யெழுந்தருள, வடமொழி வேதம் எம்பெருமானது குணவிசேஷங்களைப் பேசத் தொடங்கி, அவற்றின்முடிவுகண்டறியமுடியாமையை “யதோவாசோ நிவர்த்தந்தே, அப்ராப்ய மநஸா ஸ” என்னும் வாக்கியத்தினால் உணர்த்திப் பின் இளைத்துப்போய்ப் பின்னும் அப்பெருமானை நாடிச் செல்வதற்கு அறிகுறியாக எம்பெருமானுக்குப் பின்னே பாராயணம் செய்யப்பட்டு வரும் முறைமை யுண்மையால், அங்ஙனமே, மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களின் திவ்ய சூக்தியான திவ்யப் பிரபந்தங்கள், அப்பெருமானதுஸ்வரூபத்தை உள்ளபடி உணர்ந்து அவனை ஸாக்ஷாத்கரித்து முற்பட்டமைதோன்ற, அப்பெருமானுக்கு முன்னே யிருந்து பாராயணம் செய்யப்படவேண்டுமென்னும் விசேஷ முறையும் நமது நாதமுனிகளால் வகுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வரிய விஷயத்தை ஸ்ரீமந் நிகமாந்த குருவாகிய வேதாந்த தேசிகரும் “விந்த்யஸ்தம் பாதவிஹ தகதே” என்னும் சுலோகத்தில் அருளிச் செய்திருக்கிறார். இன்னும் விரிக்கின் பின்னும் பெருகும். மற்றொரு முறைகூடிற்கவனிப்பாம்.

[illegible]

மதமாவது யாது?

இப்பொருள் பற்றிய வியாஸமொன்றை யெழுதப்புகும்போது, எமது நாட்டு ஸாதாரண ஜனங்களின் நினைவு எமக்கு முன் வந்து நிற்கின்றது. ஸாதாரண ஜனங்களிடம் சென்று, “மதமாவது யாது? உங்கள் மதக்கொள்கைகள் எவை?” என்னும் வினாக்களைக் கேட்டோமானால், அவர்களிற் பெரும்பாலோர், பூஜை புரஸ்காரங்களையும விரதாதிகளையும் தாங்களிடும் குறிவகைகளையும்தாம் குறிப்பாகளையன்றி வேறில்லை. அவர்கள் மதத்தைப்பற்றி யித்துணைதான் அறிந்திருக்கின்றார்களென்பதி லேதேனும் ஐயமுண்டோ?

மதமின்னதென்பதும், மதக்கொள்கைகளிவையென்பதும், அவற்றைப் பெறவேண்டிய ஸாதனங்களிவையென்பதும், அவர்கள் அறிந்தார்களில்லையென்பதைச்சொல்லவும் வேண்டுமோ?

நாம் மேற்காட்டிய பூஜை புரஸ்காராதியவாய—அவர்கள் அறிந்துள்ளவைதாம் அவ்வம் மதக்கொள்கைகள் ஆகுமா? அவை மதமென்பதொன்றை யுணர்த்துமா? என்று ஆராய்தல் வேண்டியிருக்கின்றது.

மதம் என்பது கொள்கை யென்னும் பொருளைத் தருவதாய் ஒரு ஆசாரியனுடைய அபிப்பிராயத்தைப்பற்றி நிற்கின்றதென்பது வெளிப்படை. தற்போது அவ்வாச்சாரியருடைய ஜனங்களிற் பெரும்பாலோரும் அவ்வாசாரியர் எதனைத் தம்மதமென்றும், எவற்றைத் தம்மதக்கொள்கைகளென்றும் பிரகடனம் செய்து ஸ்தாபித்திருக்கின்றாரோ, அதனையும் அவற்றையும் அறியாமலோ மறந்தோ கைவிட்டோ—பின்பற்றுதவர்களாய், அவ்வாச்சாரியார் தம் மதக்கொள்கைக்குப் புறச்சாதனங்களாகக் காட்டியுள்ள—ஏற்படுத்தியுள்ள ஸாரமற்றவற்றையே மதக்கொள்கைகளெனப் பற்றிக்கொண்டிருக்கின்றார்கள்.

இது அவ்வம் மதாச்சாரியரது ஸ்தானங்களைத் தற்போது வகித்து, அவ்வம் மதப் பற்றுடைய ஜனங்களிடத்து வரி வாங்கி ஜீவிக்கும் மதாச்சாரியார் என்ற பெயர்வகித்துத் திரியும் சிலரால் நேர்ந்த குறையென்றே மதிக்கவேண்டியிருக்கின்றது. இச்சிலர் தம்மதத்தைத் தாம் தெரிந்து தம்மதக்கொள்கைகளில் நன்கு பயின்று தம்மதப்பற்றுடையார்க்கு அவ்வுண்மைகளை அவ்வப்போது தெரிவித்துக்கொண்டு வந்திருந்தார்களாயின், இங்ஙனம் ஒவ்வொரு மதத்திலும், ஸாரமற்ற புறச்சாதனங்களே மதமெனப் போற்றப்பட்டு ஜனங்கள் உண்மையறியாது வெறும் வேடதாரிகளாகத் திரிந்து, ஒற்றுமையிழந்து அகங்கரித்து மதர்த்து மயங்கியிருப்பதற்குக் காரணமிருந்திருக்க மாட்டாது. ஆகையால் அவ்வம்மதப் பெரியார், தத்தம் மதக்கொள்கைகளை, தத்தம் மதப்பற்றுடையாருக்கு நன்கு போதிக்கக் கடமைப்பட்டுள்ளார்களென்பதை நினைவுறுத்துகிறோம்.

இங்கு, இம்முறையில் உழைத்தும் உதவியும் வரும் திருப்பாதிருப் புலியூரில் எழுந்தருளியிருக்கும், திருக்கோவலூர் ஞானியார் மடாதிபதி ஸ்ரீ சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாச்சார்ய சுவாமிகளைப் போற்றி யவர்களையே மற்றவர்க்கும் உதாரணமாகக் காட்டுகின்றோம்.

இளமையிற்கல்.

“இளமையிற்கல்” என்று நமது ஔவைப்பிராட்டியார் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார். அது போல் நாமும் சிறுபிராயத்திலேயே படிப்பு, வித்தை இன்னும் சன்மார்க்கமான செய்கைகளையும் பழகிக்கொண்டு வரவேண்டும். அவ்விதம் பழகிவந்தால் நாளுக்குநாள் படிப்பும் ஊக்கமும் நல்லறிவும் பெரியோர்களின் உதவியும் வளர்ந்துகொண்டேவரும். ஆனால், இனிமேல் நாம் பழகிக்கொள்ள நிரம்பக் கஷ்டமடையக்கூடும். அவ்விதம் கஷ்டப்பட்டுப் பிரயாசை யெடுத்துப் படித்துவந்தால் படிப்பு அவசியம் வரத்தக்கதே. அப்படிச்செய்யாது நாம் நமது குழந்தைகளை முதலாம் வாசகம் படித்து முடிந்தபின் அன்னிய நாட்டுக்கு அனுப்பி அவர்கள் ஒன்றும் தெரியாமல் வார்க்கவலையாக வேயிருந்து மதிமயங்கி நமது தாய்நாடு வந்து சேர்ந்ததும் அப்பிள்ளைகளுக்கு விவாஹம் செய்துவைத்து அப்பிள்ளைகள் ஒன்றும் தெரியாமல்நின்று பரிதபித்துக் கெட்டவர்களாகி விடுகிறார்கள். இவையெல்லாம் பெற்றோர்களின் குற்றமே யொழியப் பிள்ளைகளின் குற்றமல்ல. ஆகையால் இனிமேலாவது ஏமாறுமல் நமது குழந்தைகளைச் சிறுபிராயத்திலேயே படிப்பு, வித்தை இன்னும் சன்மார்க்கமான செய்கைகளைப் போதித்துக் கம்பர் வாழ்ந்திருந்த நம் செந்தமிழ் நாட்டில் தமிழ்வேதம் எங்கும் பரவி வரும்படி நம் கருணையங்கடலாகிய சிவபெருமான் கிருபை பாலிப்பாராக என்று பழ. சொக்கலிங்கன் தாப்பாவிலிருந்து எழுதுகிறார்.

ஈப்போ தனவைசியர் சங்கம்.

இச்சங்கத்தின் மூன்றாவதாண்டு நிறைவு விழா சங்கக் கட்டிடத்திற்குப் பக்கத்தில் அமைக்கப் பெற்றிருந்த கொட்டகையில் வைகாசிமீ [illegible] காலை [illegible]-மணிக்கு ஆரம்பமாகிநடைபெற்றது. கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்றபின் கூலிம் ஸ்ரீமான் பழ. மு. மு. [illegible] விருதைச் செட்டியாரவர்கள் [illegible] [illegible]. சங்கத்தின் அக்கிராசனராக ஸ்ரீமான் இராமலிங்கச் செட்டியாரவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பெற்றது. பின்னர்க் காரியதரிசி அறிக்கைவாசித்தார். அக்கிராசனர், முகவுரையாகச் சிலபேசியபின்னர், அவர்களால் எழுதி அச்சிடப்பெற்ற முகவுரைப் பிரசுரம் அனைவருக்கும் வழங்கப்பெற்றது. சிகாமெட் ஸ்ரீமான் ச. ா. சு. மெ. சுப்பிரமணியச் செட்டியார் “[illegible]” என்பதையும், யாழ்ப்பாணம் ஸ்ரீமான் ச. சிவசம்பு அவர்கள் “கார்த்திகேசன் திருவவதாரம்” என்பதையும், [illegible] இந்த வாலிபர் சங்கத்தின் [illegible] யர் ஸ்ரீமாந் செ. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் “யாக்கையின் பயன்” என்பதையும் மிக அழகாகப்பிரசங்கித்தார்கள். அக்கிராசனர்முடிவுரை கூறியபின்னர், காரியதரிசியால் வந்தனோபசாரம் சொல்லப்பெற்று பகல் [illegible]-மணிக்குச் சபை இனிது நிறைவேறியது.

வைகாசி விசாகம்:—இங்கு திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தெண்டாயுதபாணி சுவாமிக்கு வைகாசிமீ [illegible] [illegible] தனவைசியர்களால் விசாக விழா மிக விமரிசையாக நடத்திவைக்கப் பெற்றது. ஒவ்வொரு [illegible] லும் ஏராளமான ஜனங்களுக்கு [illegible] அளித்தார்கள். இவ்வருடம் சப்பரம் போவதற்காக விசேஷமாக இடங்கள் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தன. [illegible] இரவு அழகிய ரதத்தில் ஸ்ரீ ஷண்முகப்பெருமான் எழுந்தருளி உலாவாக வந்து காட்சி கொடுத்தருளினார். ரதத்தில் புதிதாக மின்சார விளக்குகள் போடப்பெற்றிருந்தன. எவ் வருடங்களைக் காட்டிலும் இவ்வருடவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றதோடு ஏராளமான ஜனங்களும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

உபந்நியாசம்:—வைகாசிமீ [illegible] இரவு [illegible]-மணிக்கு தனவைசியர் சங்கத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பெற்றது. ஸ்ரீமாந் சிவசம்பு அவர்கள் “[illegible] கடமை” என்பதுபற்றி ஒருமணி நேரம் மிக வீரத்தோடு பேசினார்கள். காரியதரிசியால் வந்தனோபசாரஞ் சொல்லப்பெற்று [illegible]-மணிக்குச்சபை இனிது நிறைவேறியது.

வழிப்பறி:—மாலிம்வார், [illegible] தோட்டத்திற்குச் சென்ற இவ்வூர் [illegible] கா. நா. கருப்பையாப் பிள்ளையையும், சுப. லெ. ராம. கடை இராமசாமிச் செட்டியாரையும் நாளது வைகாசிமீ [illegible] காலை [illegible] மணிக்கு [illegible] ராவார் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து தோட்டத்திற்குச் செல்லும் வழியில் புதரில் பதுங்கியிருந்த சில திருடர்கள் மறித்துக்கொண்டு பலமாக அடித்துத் தலையில் கத்தியால் வெட்டிவிட்டுச் சுமார் [illegible]௦௦-யும் எடுத்துக்கொண்டு போய்விட்டனர். கருப்பையாப்பிள்ளை தலையில் [illegible] கட்டியிருந்தபடியால் கத்தியின் வெட்டிலிருந்து கொஞ்சம் தப்பித்துக்கொண்டார். மேற்படி திருடர்களைக் கண்டுபிடிப்பதற்கு அரசாங்கத்தார் முயற்சித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

பிறநாட்டுச் செய்தி.

இத்தாலி தேசத்தில் மரண தண்டனை கிடையாதாம்.

* * *

இத்தாலி நாட்டிலுள்ள வெசூவியஸ் எரிமலை பொங்கத்தொடங்கியிருக்கிறது.

* * *

இங்கிலாந்தில் தற்போது கO-லட்சம் பேர்வரை தொழிலில்லாமல் இருக்கின்றார்கள்.

* * *

ஜப்பானில் மீன்களை யுயிருடனே தாம் விற்பதும் வாங்குவதும் செய்கிறார்கள்.

* * *

பஞ்சாப் படுகொலையாளனாகிய பாதக டையர் மரணாவஸ்தையிலிருக்கின்றானாம்.

* * *

துருக்கியில், பெண்கள் ஆண்களுடன் பகிரங்கமாகக் கலந்து ஸ்நானம் செய்யக்கூடாதாம்.

* * *

போர்னியோவில் மீன்கொத்திப் பறவை தன் கூட்டைத் தேனீக்களின்கூட்டில்கட்டிக்கொள்ளுமாம்

* * *

சென்ற ஆண்டு வியாபார சம்பந்தமாக ஆங்கில ஆகாய விமானங்கள், கூ,சச,000 மைல்கள் தூரம் பறந்திருக்கின்றனவாம்.

* * *

சூயேஸ் கால்வாயினால் அரசாங்கத்துக்கு ஒரு ஆண்டுக்கு உள, ருகூ,000 பவுன்கள் வருமானமாகக் கிடைக்கின்றதாம்.

* * *

லண்டனிலுள்ள ஜீவவர்க்கக் காட்சிச் சாலையில் ஒரு பெரும் முதலை கச-அடி நீளத்திலிருக்கின்றது. வயது கூO-ஆண்டு.

* * *

ஜர்மனியில் வந்து தங்கிப் பிரயாணம் செய்யும் அந்நியர்கள் வரிகொடுத்து அநுமதிச்சீட்டுப்பெற்றுத்தான் புறப்படவேண்டுமாம்.

* * *

டென்மார்க் நாட்டு வியவசாயிகள் அறிவுள்ளவர்களாகையால், அங்கே விவசாயம் மிகவும் சீராக நடைபெறுகிறது.

* * *

லண்டன் வெம்பிளிக் கண்காட்சியில் தஞ்சைக்கோயிலின் அழகிய கோபுரம் போன்றதொரு கோபுரம் செய்துவைக்கப்பெற்றிருக்கின்றது

* * *

வடகடலில், ஒரு நார்வேக் கப்பல் மற்றொரு கப்பலுடன் மோதிக்கொண்டதால், பெண்களும் பாலர்களுமாகப் பலர் மாண்டனர்.

* * *

பாஸிஸ்டுக் கட்சியைச்சேர்ந்த பிரபலரான ஸ்ரீமான் மாரினியைக் கைது செய்திருக்கின்றார்கள். இவர் ஸ்ரீமான் முஸோலனிக்கு அடுத்தவராம்.

* * *

அமெரிக்க ந்யூயார்க்கிலுள்ள, "உல்வொர்த்" என்னும் கட்டிடமே உலகில் உயர்ந்த கட்டிடமாகக் கருதப்படுகின்றது. அதில் கூஉ-மாடியுள்ளன.

* * *

இங்கிலாந்தில் கூ-கO-ம் நூற்றாண்டுகட்கு முன் பூனையே யில்லாதிருந்ததாம். அக்காலம் பூனையைக் கொல்பவனுக்கு அபராதம் விதிக்கப்பட்டிருந்ததாம்.

* * *

உலக மேதாவிகளில் ஒருவராகக் கருதப்படும் கனம் பெர்னார்ட்ஷா என்பவர் மேனாட்டு வழக்கப்படி மாமிசம் உண்பதுமில்லை; மதுவும் புகையும் குடிப்பதுமில்லையாம்.

* * *

பெல்ஜியத்தில் கைதிகள் விடுதலையாகும்போது, அவர்கள் சிறையில் வேலை செய்த காலையிற் கிடைத்த சிறைவருமானத்தின் கO-ல் ங-பாகத்தை யவர்கட்குக் கொடுப்பது வழக்கமாம்.

* * *

பிரான்சின் புதிய ஜனாதிபதியாக ஸ்ரீமான் டேமார்க்தெரிங்தெடுக்கப்பட்டிருக்கிறார். மந்திரிசபையைக் கூட்ட ஸ்ரீ ஹெரியட்டுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

* * *

ஐரோப்பிய மாதர்கள், தங்கள் படுக்கையறைபிற்கூடத் தரிக்கக்கூடாத ஆடைகளைத் தரித்துக்கொண்டு கோவில்கட்கு வருகிறார்களென்று ஒரு பாதிரியார் சீமையிற் பிரசங்கம் செய்தனர்.

* * *

யுத்தத்தின்போதும், அதன் பின்னும் கான்ஸ்தாந்திநோபிலிலிருந்து ஆங்கில அரசாங்கத்துக்கு அரிய ஊழியம் செய்துவந்த லௌபெட்டி என்னும் ஒற்றனைத் துருக்கி யரசாங்கத்தார் கைது செய்திருக்கின்றனர்.

வைசியநாட்டுச்செய்தி

ஆவனிப்பட்டி.

இவ்வூர் ஸ்ரீ மீனாம்பிகா வாசகசாலையில் ரக்தாட்சி ஆண்டு வைகாசித் திங்கள் உஎ-ம் நாள் பிற்பகல் ங-மணிக்கு மூன்றாவது ஆண்டு நிறைவு விழா ஸ்ரீ தெ. பழ. கரு. பெரியகருப்பன் செட்டியாரவர்கள் அக்கிராசனத்தில் பல அறிஞர்களால் உபந்யாசம் பெற்றது. கூ-மணிக்கு மங்களகரமாய் சந்தன தாம்பூல விநியோகங்கள் வழங்கப்பெற்று சபை நிறைவேறியது என்று காரியதரிசி கரு. பெரி. விஸ்வநாதச் செட்டியார் எழுதுகிறார்.

* * *

சிவநேசர் திருக்கூட்டம்.

இத்திருக் கூட்டத்தார் இரத்தாட்சி ஆண்டு ஆனித்திங்கள் முதல்நாள் ஆவினிப்பட்டிக்கு வந்து சிவாலய தரிசனஞ் செய்தும், இரண்டாம் நாள் முற்பகல் இரண்டு நேரமும் சிவநேசச் செல்வர்களான பலவான்குடி ராம. கு. ராம. இராமசாமிச்செட்டியார், காரைக்குடி மெ. பெரி. ராம. மெ. ஞானசம்பந்தச் செட்டியார், கா. கா. அழ. காளையப்ப செட்டியார், கண்டனூர் தெ. அரு. சித. இராமநாதச் செட்டியார், கோநகர் சுப்பிரமணிய சிவம், கீழைச் சிவற்பட்டி வ. மு. இரத்தினேசுவரையர், காரைக்குடி சேவு. மெ. மெய்யப்ப செட்டியார், முத்த. வெ. சொக்கலிங்கம்செட்டியார் ஆகிய இவர்கள் சைவப் பிரசங்கம் செய்தும் அன்றிரவு இளையாற்றங்குடி வந்து சிவாலய தரிசனம் செய்தும், ஆங்கு சிவநேசச் செல்வர் குன்றக்குடி வேங்கட நாராயண சாஸ்திரியார் சதாசிவப் பிரமம் ஆகிய இருவரும் சைவப் பிரசங்கம் செய்தும் சிவத்தொண்டு புரிந்தார்கள்.

இத்திருக் கூட்டத்தார் நிகழும் ஆனித்திங்கள் ங௧, ங௨-வ செவ்வாய்க் கிழமைகளில் உய்யக்கொண்டான் சிறுவயலிற்கூடி உரிய சிவத்தொண்டு புரிவார்கள்.

திருப்பெருந் துறையில் ஆனித் திங்கள் கச-ம் நாள் வரை நடைபெறும் திருவிழாவுக்கு அன்பர்கள் விரும்பியவண்ணம் உஉ-ம் நாட்சென்று தரிசனம் செய்து, உடு-ம் நாள் திரும்புவதாகவுந் தீர்மானித்திருக்கிறார்கள். உடு-ம் நாள் கண்டனூரில் வந்து பழைய மடத்திற்றங்கி திருவமுதுண்டு ஆங்குநடைபெறும் திருவிழாவைத்தரிசிக்குமாறு கண்டனூரிலுள்ள சிவநேசச் செல்வர் கேட்டுக்கொள்ளுகிறார்கள் என்று காரியதரிசி இராமசாமி எழுதுகிறார்.

இந்தியச் செய்தி.

கல்கத்தாவில் ஹூக்லி நதிக்குப் புதிய பாலமொன்றை கூங-கோடி ரூபாயிற் கட்டுவதாக உத்தேசிக்கிறார்கள்.

* * *

தாரகேசுவரம் ஸத்தியாக்கிரஹம் வெகு மும்முரமாகவே நடந்துகொண்டிருக்கின்றது. ஸ்திரீ தொண்டர்களும் கைது செய்யப்படுகின்றார்கள்.

* *

ஸ்ரீமான் ஈ. வி. இராமசாமி நாயக்கர் விடுதலை யடைந்தவுடன் திரும்பவும் வைக்கம் சத்தியாக்கிரஹப்போரில் கலந்துழைப்பாரெனத் தெரிகின்றது.

* * *

விசேஷமாக அகில இந்திய தேசீய மகாநாடொன்றைக் கூட்டுவதில் தமக்கு அபிப்பிராய மில்லையென்று மகாத்மா தெரிவித்திருக்கின்றனர். இது வீண் பொருட்செலவேயாம்.

* * *

கனம் மாணிக்ஜீ தாதாபாய் தமது சிறந்த சட்டப் புத்தகசாலையைநாகபுரி சர்வகலாசாலைக்குக் கொடுத்துதவி யிருக்கின்றார்கள். நாகபுரி சர்வகலாசாலையில் சட்டக் கல்லூரி ககூஉடு-ஆண்டு திறக்கப்படும்.

* * *

நிஜாம்அரசர் மாஜிகலிபா அப்துல் மஜிகான் அவர்கட்குநாளிது ஜூலை மாதத்திலிருந்து மாதம் க-க்கு ந௦௦-பவுனுகஆயுள் பூராவும் உபகாரதனம் கொடுப்பதாக வாக்களித்து அப்படியே உத்தரவும் பிறப்பித்து விட்டார்கள்.

* * *

போத்தனூர் வேலை நிறுத்தம் ஜில்லாத் தலைவரின் சமரஸமுயற்சியால் முடிவடைந்துவிட்டது. வேலை நிறுத்தஞ்செய்திருந்த நாட்கள் ரஜாநாட்களாகக் கருதப்படுகின்றனவாம். இதன் சார்பாக எழுந்த சேலம் வேலை நிறுத்தமும் அப்படியே போகும்.

* *

ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் கஉச-எ-பிரிவின் கீழ்க் குற்றவாளியாக்கப்பெற்றுக் கைது செய்யப்பட்டார்; ஆனால் தற்போது, உ௦௦௦ரூ கட்கு ஒருவராக இருவர் பிணை (ஜாமீன்) கொடுத்ததன்பேரில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். விசாரணை உஎ-உ நடைபெறும்.

ராமநாதபுரம்ஜில்லா, அரசாங்க ஊர்க்காவற் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு உதவி ஊர்க்காவற் றலைவரும் ஒரு ஊர்க்காவற் சேவகத் தலைவனும் இன்னும் சிலரும் இ. பி. கோ. நஉடு-பிரிவுப்படி குற்றம் சாட்டப்பெற்று முறையே கூ-மாத கடுங் காவலும் ஒரு மாதக் கடுங்காவலுமாகத் தண்டனைவிதிக்கப்பட்டார்கள்.

* * *

சில நீதிபதிகளைச் சுற்றுப் பிரயாணத்துக்கென்று ஒதுக்கிவைத்து, அதிக வேலையுள்ள இடங்கட்கவ்வப்போது அனுப்புவது சாத்தியமாகும்படியான ஒரு சட்டத்தைச் செய்ய சென்னை யரசாங்கத்தார் உத்தேசித்திருக்கிறார்கள். இச்செயல் நம்மிந்தியர்களின் ஒற்றுமை யின்மையையும் அறியாமையையும் தனநஷ்டத்தையும் புலப்படுத்துகின்றதன்றோ?

* * *

மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஆங்கிலத் தமிழ்ப் பரீக்ஷை:— இது ககூஉச-மார்ச்சு அ-உ நடந்தது. இதில் பி. ஏ. பரீக்ஷை இரண்டாவது வகுப்பில் நான்கு மாணவர்களும், எப். ஏ பரீக்ஷை இரண்டாவது வகுப்பில் உஆ-மாணவர்களும், மெற்றிக்குலேஷன் பரீக்ஷை இரண்டாவது வகுப்பில் நந-மாணவர்களும் தேறியிருக்கின்றார்கள் என்றுஷ்டி சங்கம் காரியஸ்தர் பத்திரிகை மூலம் அறிவிக்கிறார்.

* * *

ஜயிதோவுக்குச் சென்றுகொண்டிருந்த அகாலி ஷாஹிதி ஜதாக்களில் ஒன்றுக்கு விருந்தளித்து உபசரித்த குற்றத்திற்காக சர்தார் மோஹிந்திரஸிங் என்னும் பஞ்சாப் சட்ட ஸபையங்கத்தினர்க்கு உஇ-வருஷம் கடுங்காவலும் கரு௦௦ ரூபாய் அபராதமும் தண்டனையாக விதிக்கப்பட்டனவாம். "பேயாசாக்ஷியில் பொய்சொல்லாதிருப்பவர்க்குப் பெருத்த தண்டனை" யுண்டாகுமென்று நாம் கேட்டதுண்டு.

* * *

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் உஉ, உங-வது வருஷோத்ஸவம் நாளிது ரக்தாக்ஷிஸூஆனிமீ கங-உக்குச்சரியான ககூஉசஸூஜூன் மீ உடு-உ மாலை ச-ங௦-மணிக்கு மதுரையில் ஸேதுபதிக் கலாசாலையில் நடத்தப்பெறும். அவ்வமயம் சென்னை, வித்யா இலாகா மந்திரி, மகா-ா-ா-ஸ்ரீ கனம்ஸ்ரீமான் பாகராமதாஸ் பாத்ரோ அவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள் என்று கனம் இராஜாராஜேஸ்வர ஸேதுபதி, அவர்கள் பத்திரிகை மூலம் தெரிவிக்கிறார்கள்.

* * *


ஸ்ரீமாந் சங்கராசாரியருக்கு இங்கிலாந்து வழக்கில் பெருத்த நஷ்டமும் கஷ்டமும் அவமானமும் ஏற்பட்டிருக்கின்றனவென்பதை நேயர்கள் அறிவார்கள். "பட்டாலிலே படும்" என்னும் பழமொழிப்படி அவர்க்கு அவரது சொந்த வசியிருந்த அரண்மனைபோன்றதொரு கட்டிடத்தின் பகுதி திடீரென அடித்த காற்று மழையினால் சேதமாகிவிட்டதெனக் கேட்டு வருந்துகின்றோம். "பெரியாரைப் பிழைத்தவர் பெரும்பாடு படுவர்" என்னும்பழமொழிபிரத்யக்ஷமாயிற்று.

* * *

தெலுங்க நாட்டிலிருந்து சுப்பிரமணியசுவாமி என்னும் ஒருவர், விழுப்புரம் திண்டிவனம் பக்கங்களில் வந்து, "புலாலுண்ணல்லாவிடில் மோக்ஷமில்லை" என்று போதித்துவருகின்றனராம். ஐயோ! கலிமுதிர்ச்சியே!! நடிபெடுத்தவரெல்லாந் தண்டக்காரராகவும் காஷாயந் தரித்தவரெல்லாம் ஆசாரிய சுவாமிகளாகவும் விளம்பிவிட்டார்களே!!! உலகம் நமோதமின்றதே. ஏ! கலியே!! இன்னும் என்னென்ன விசித்திரங்களையும் தீங்குகளையும் செய்துகொண்டிருப்பையோ!!!

*

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் ருதிரோற்காரி வருஷம் பங்குனி மாதம் உசு, உஎ, உஅ-தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும் யோக்யதாபத்திரமும் பல மாணவர் பெற்றிருக்கின்றார்கள். அவருள் பண்டித பரீக்ஷை இரண்டாவது வகுப்பில் ஒருமாணவரும், பாலபண்டித பரீக்ஷை இரண்டாவது வகுப்பில் நான்கு மாணவர்களும், (இவருள் இருவர், மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை மாணவர்கள்) பிரவேச பரீக்ஷை முதல் வகுப்பில் ஒருவரும் (இவர், மதுரைத் தமிழ்ச் சங்க மாணவர், முதற்பரிசாக ரூ. ௫௦ பெறத்தக்க தங்கப் பதக்கம் பெற்றார்) இரண்டாவது வகுப்பில் எண்மர்களும் (இவருள் நால்வர் மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை மாணவர்கள்) தேறியிருக்கின்றார்கள்.



நீரென் செயும்! வினை தானென்
செயும்! எனை நாடிவந்த
கோளென் செயும்! கொடுங் கூற்றென்
செயும்! குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையும் ஷண்முகமும்
தோளுங் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.

—கந்தரலங்காரம்.

தனவைசிய ஊழியன்.

காரைக்குடி. ஆனிமீ ககவ

கட்டுரை வரைவோர் கவனிக்க.

(௩)

கட்டுரை என்பது நூன்முகமாகவும் பிற வாயிலாகவும் அறிந்தமை கொண்டு ஒரு பொருள்பற்றி அதற்கேற்ற வற்றைத் திரட்டி வரைவது ஆகும். தாம் பல்லிடங்களிலும் துருவி யறிந்துகொண்ட பொருள்களை உலக மக்கள் எளிதாக அறிந்துகொள்ள வேண்டுமென்ற கருத்துக்கொண்டே கட்டுரை வரைவது. அவ்வாறு கட்டுரை வரையுங்கால் எப்பொருள் பற்றி ஒருவர் கட்டுரை வரைகின்றாரோ, அப்பொருள் அவர் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். இன்றேல் மக்கள் நலனையெண்ணி அவர் அக்கட்டுரையை வரைந்தாரேனும், அதன் விளைவு பெருந்தீமையாகவும் வந்து முடியும். அறியா ஒன்றில் தலையிடுதல் ஆகாது. இந்நாள் கட்டுரை வரைவோரில் அறியாதவற்றுள் தலைப்பட்டு இடர்ப்படுவோர் பலர் இருக்கின்றனர். அறியாதவற்றை அறிந்துகொண்டு பின்னர் அதுபற்றி வரைதல் நலம்.

இலக்கணங்களை அமையப் பயிலாதவர்களும் தமது விருப்பத்தை கட்டுரை மூகமாகத் தெரிவிப்பது தவறாகாதென நாம் கூறினோம். ஆனால், அவர்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய சில உண்டு. தாம் பத்திரிகைக்கு அனுப்புங் கட்டுரைக்கு ஒரு பிரதி வைத்துக் கொள்ளல் வேண்டும். பத்திரிகையில் அச்சிட்டுவந்த தமது கட்டுரையையும் தாம் அனுப்பியவற்றிற்கு எழுதி வைத்திருக்கும் பிரதியையும் ஒப்பு நோக்குதல் வேண்டும். பத்திரிகையில் வெளியானது ஆசிரியரால் திருத்தஞ் செய்யப் பெற்றிருக்கும். தமது கையெழுத்துப் பிரதியையும் பத்திரிகையையும் வைத்து நோக்கும் பொழுது, தாம் எழுதியவற்றிலுள்ள பிழைகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும். அவ்வாறு தெரிந்து கொண்டால் அடுத்த கட்டுரையில் அப்பிழைகளின்றி எழுத வழியுண்டு. இப்படியே சில பல கட்டுரைகளாலேயே பிழையின்றி எழுதக் கற்றுக்கொண்டு விடலாம். கட்டுரை பிழையின்றி எழுதக்கற்றுக்கொள்வதற்கு இது சுருக்கமான வழி. இப்பொழுது இவ்வாறு செய்து திருந்தி விடுவோரும் சிலரிருக்கின்றனர். நாம் திருத்துவது தெரிந்து அடுத்த முறை அப்பிழையின்றி எழுதுகின்றனர். இம்முறைப்படி திருந்தி யெழுதப்பெறும் கட்டுரைகளைக் கண்டால் நமக்கு மகிழ்ச்சியாக விருக்கிறது. ஏன்? திருந்திக்கொள்ள வேண்டுமென்ற அறிவைப் பெரிது முடையராவிருந்து திருந்திவருகின்றமையால். ஆனல் மிகச்சிலர்தாம் இதனைக் கவனிக்கிறார்களேயல்லாமல், பலர் கண்ணை மூடிக்கொண்டே யெழுதுகின்றனர். தாம் பிரதிவைத்துக்கொள்வதுமில்லை. திருந்த வேண்டுமென்ற கவலை சிறிதுமில்லை. கட்டுரை யெழுதுவதில் மட்டும் அவா மிகுதி. எழுதியெழுதித் தள்ளி விடுகின்றனர். பிரசுரிக்கப்படவில்லையானல், உடனேகோபங்கொண்டு ஒரு அணாத் தலையை அனுப்பிக் கடிதமெழுதி விடுகின்றனர்.

ஒருவர் எத்துணைமுறை ஒன்றைத் திருத்தஞ்செய்தபோதிலும், திரும்பத்திரும்ப அப்பிழையைக் கவனியாது எழுதிக்கொண்டேயிருப்பாரானல், வெளியிடுவோர்க்கு மிகச் சிரமமாக விருப்பது இயல்பு. அன்றி எப்பொழுதுதான் அவர் திருந்துவது? பிழையற எழுதுவதில் கருத்தைப் பதிய வைக்காது, பக்கக்கணக்காகக் கட்டுரை எழுதவே விரும்புவதில்யாது பயன்?

கட்டுரைவரையப் பயில்வோர் பெரிய விவாதத்திற்குரிய பொருள்களைப் பற்றாது சிறிய பொருள்களை யெடுத்துக்கொண்டு கட்டுரையைக் கண்டபடி நீட்டி விட்டு விடாமல் சுருக்கமாக முடித்தல் வேண்டும். வாக்கியங்கள் நீண்டு செல்லவிடுதல் படாது. சில சொற்கள் கொண்ட தொடரினால் ஒவ்வொரு பொருளையும் முடித்துக்கொண்டு செல்தல்வேண்டும்.

இன்னோரன்னவற்றைக்கட்டுரை வரையும் அன்பர்கள் கவனித்து எழுதுவார்களானல், தமக்கும் வெளியிடுவோருக்கும் வாசகர்கட்கும் நலனுண்டு.

ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால்.

இது ஒரு நல்ல பழமொழி; இதனை விரித்தால், சுத்தத்தையும் அசுத்தத்தையும் — பொய்யையும் மெய்யையும் — சுதந்திரத்தையும் பாதந்திரத்தையும், என்னும் இவைபோன்ற—ஒவ்வாத இரண்டையும் பற்றியுள்ளவர் எவரும், எடுத்த காரியத்தை முடித்தல் இயலாதவர் ஆய்விடுவரென்பதும், அவர் எவராலும் (இருதிறத்தாராலும்) போற்றப்படமாட்டாரென்பதும், நன்கு வெளியாகும்.

ஆமாம்; ஒவ்வாத இரண்டு கட்சியிலும் தலையிட்டுக் கொண்டவர்கள், ஆற்றிலும் சேற்றிலும் கால் வைத்தவர்களாகவே—பூர்ண சுத்தத்தையடைய முடியாதவர்களாகவே இருப்பரென்பதை விரித்துச் சொல்லவும் வேண்டுமோ? சேற்றுக்காலை யெடுத்து ஏறி ஆற்றில் வைத்துச் சுத்தம் செய்துக் கொண்டாலல்லாமல், அவரைச் சுத்தரென்று யாரும் சொல்லமாட்டார்கள்; அன்றி, ஆற்றுக்காலை யெடுத்துச் சேற்றில் விட்டு விட்டால், அச்சேற்றில் வாழும்புழுபூச்சிகளும், பிறஅசுத்த ஜீவர்களும், நமது நரகத்துக்கு இவரும்வந்தனர் என்று போற்றிப் பாராட்டுதலுஞ் செய்வர். பின்னர், எல்லாருஞ் சேர்ந்து நரகராஜ்யம் நன்கு நடத்தலாம்; அப்படியன்றி, இரண்டிலும் கால் வைத்துக்கொண்டிருந்தால், வௌவால் போன்று, இருகட்சிக்கும் இச்சகம்பேசித் திரியும் குணமும், அவர் அடிப்பரோ இவர் அடிப்பரோ என்னும் அஞ்சுந்தன்மையும், உள்ளதை மறைத்து இல்லதைப் பேசுந் தன்மையும் பெருகி, இருவராலும் போற்றப்படாமல், காந்துதிரிந்து கரைந்து கறைந்து கன்றி நின்று கலங்கல் வேண்டியிருக்குமன்றோ?

இத்தகைத் துறையில் தற்போது யாவரிருக்கின்றனர்? நமது ஸ்வராஜ்யக்கட்சி நண்பர்கள் இங்ஙனம் கால் வைத்துத் தியங்கி நிற்கின்றனர். அகில இந்தியத் தேசிய சபையில் ஒரு காலும், அச்சபை சேறென ஒதுக்கித் தள்ளிய சட்டசபையில் மற்றொரு காலும் வைத்துக்கொண்டு, எடுக்க முடியாமலும் விடுக்க முடியாமலும், இரண்டுகால்களும் அகன்று போய், இடுப்பு வலியெடுத்துச் சுதந்தர வாழ்வில் நிற்க முடியாதவர்களாகி, பிறர் உதவியை நாடித் தவித்து, அவர் இடும் அதிகாரத்துக்கு அடங்கி, அவர் இட்ட கட்டளைப்படி அதர்மத்துக்குப் பிரமாணம் கூறி, முதுகந்தண்டு வளைந்து, முனைத்து நிற்கமாட்டாமல் விழித்துக்கொண்டிருக்கின்றனர்.

எவ்வகையிலும் அதிகார வர்க்கம் தேச மேன்மையை நாடாதென்றும், தேசமக்களின் க்ஷேமத்தைக் கருதாதென்றும், பிரஜைகளை யடிமையாக்கியே தான் வாழ நினைத்திருக்கின்றதென்றும், பலவகையிலும் உதவிசெய்தும் ஒதுங்கி நின்றும், பரீக்ஷித்தும் விரித்துரைத்தும், இது பயன் படாதமுறையென, நமது தீர்க்கதரிசி—முக்காலமுணர்ந்த முனிவர்—ஆய்ந்திறங்கிய அறிஞர்—தமக்குப்பயன் வேண்டாத தியாகி—மனித உருவில் வந்த தேவன்—நமது காந்தியடிகள், பந்தத்துக்குக் காரணமாகிய ஐந்து இந்திரிய வாசையைப் பஹிஷ்கரித்துப் பழகிய ஞானியாகையால், அம்முறையையே நன்கு அவலம்பித்து, அடிமைப் பந்தத்தைத் தருவதாகிய அதிகாரவர்க்க சம்பந்தமாகிய பந்தங்களைந்தையும் விலக்க ஐந்து பஹிஷ்காரங்களையும் ஐந்து மதில்களாகக் கட்டி, அகில இந்தியத் தேசீய சபையாகிய கோட்டையில் ஒத்துழையாமையாகிய உண்மை நீர் தேக்கியிருக்கிறார்.

அதிற் பல்லோரும் வந்து புகுந்து முழுகித் தாம் அதிகார வர்க்கத் தடிமைச் சேற்றில் வைத்திருந்த கால்களின் மேல்களின் அசுத்தங்களைப் போக்கிக்கொண்டு சுதந்தர சுத்தராகத் திகழ்ந்து கொண்டு விளங்குகின்றார்களென்பது, உலகறிந்த உண்மை.

அகத் தழுக்குடையாரது புறத் தழுக்கைப்போக்கினும் புனிதப்படாராதலின், அவ்வழுக்கர், பின்னும் சேற்றிலிறங்குவது இயற்கையேயாகும். அசுத்தபோஜனமுண்பார்க்கு சுத்தபோஜனத்தைப்பழக்கினால், [illegible] மனதும் புத்தியும் சித்தமும்ஒழுங்குபட்டுச் சுதந்தரம் தோன்றியவர்களாலது உணரப்படினும், அவர்களது பலகாலப் பழக்கத்தால், ஆசையென்னும் உட்பகையினில் தூண்டப்பெற்று, அதன் வயப்பட்டு, மீண்டும் பல போக்குகளைச் சொல்லி, அசுத்த போஜனத்தில் துணிந்து இறங்குவரன்றோ? தாம் இறங்கினது மாத்திர மன்றியில், சில அசுத்தர்கள், அசுத்தபோஜனமே பெருந்தெய்வங்கட்கும் சிறுதெய்வங்கட்கும் உகப்பென்றும், அவ்வசுத்தபோஜனமில்லாவிடில் இகத்தில் தேகம்கெடுவதன்றியில், பரத்திலும் தெய்வ விரோதிகளாகி இருவகை சுகங்களையும் இழக்க நேரிடுமென்றும்போதிப்பாரன்றோ?

தற்போது, சேறுபோன்றசட்ட சபையிற் காலும் ஆறுபோன்ற தேசியசபையிற் காலும் வைத்துக் கொண்டுள்ள நண்பர்கள், புதுமான்களான்படியால், சேறு, சேறுதான் என்பதை யுணர்ந்து [illegible] தமது ஆதிக்கத்தைக் காட்டி அசுத்தத்தைக் காட்டி [illegible] நிற்போலத், தற்போதும் சேறுக்க முயன்று வருகின்றனர்.

ஒத்துழையாமை பெருஞ்சுத்தநீர் பாய்ச்சி, [illegible] காரங்களென்னும் அரண்களையெடுத்து, அகில இந்திய தேசிய சபையாகிய ஆனந்தக்கோட்டையின் அற்புதசிலரை, தம் [illegible] கொண்டு உள்ளிருந்து [illegible] ருக்கின்றனர். அம்பெரியோரை யவ்விடம்விட்டு ஓட்ட முயல்கின்றார்கள். ஜீஞ்சுவர்களையும் இழுத்துச் சேற்றுநீரைப் பாய்ச்ச முயல்கின்றனர். பொறுமையிழந்த பிரஜைகளால் அவமானப்படுத்தப் பட்டிருக்கிற அந்த ஆற்றின் காவல்கார அடிகள், [illegible] அஹிம்சா விரதமுள்ளவர் [illegible] லும், பற்றற்றவர் [illegible] லாலும், [illegible] றைக்கப்பட்ட [illegible] அகன்று [illegible] வரோ [illegible] என்னும் பயம் தோன்றியிருக்கின்றது. உண்மை இந்தியர்களாகிய தேசாபிமானிகள்—நாமும், அரும்பாடுபட்டுக் கட்டிய இந்சுவர்களும் இடிந்துவிழப் பார்த்திருக்கலாமா? ஆற்றினிற் சேற்றுநீரிறைக்கப் பார்த்திருத்தல் கூடுமோ? அப்படியாயின், மறுபடியும் அடிமைப் புழுக்களாகவன்றோ நெளிந்துவாழவேண்டிவரும். பிறகு நம்மைச் சிலர் மீனெனப் பிடிப்பர்; பாம்பென அடிப்பர்; தவளையென எறிவர்; மற்றும் பலவாறு அந்நியர்கள் நினைத்துச்செய்வரன்றோ? இதுவரை சிங்கமென நின்றநாம் பங்கப்படுதல் ஆகுமோ? ஆதலின் வசதிபெற்ற தேசாபிமானிகளே! இவ்விவாதங்கள் புரியவே, இம்மதி உஎ-ம் நாள் ஆமதாபாத்தில் கூட்டப்பெறும் அகில இந்தியக் கூட்டத்திற்குச்சென்று, நமது தலைவர் பக்கம் நின்று, அகில இந்திய தேசியசபையின் வாழ்வைப் புனிதப்படுத்துவீர்களாக.

உள்ளூர்ச் செய்தி

சென்னை உண்டியல் வட்டம் 0—க—0
இரங்கூன் உண்டியல்வட்டம் க—க—0

ஒரு உபசாரக் கூட்டம்.

கமதூர் ஸ்தலஸ்தாபனத் தலைவர் ஸ்ரீமான் ஆவி. பழ. சிதம்பரஞ் செட்டியாரவர்கட்கு அரசாங்கத்தாரால் கொடுக்கப்பெற்ற ராவ் பகதூர் என்னும் கௌரவப்பட்டத்தை நகரத்தார்களால்கொண்டாடப்பட்ட ஒரு பெருங்கூட்டம் சனிதூ ஆனி மாதம் கூ-நாள் மாலை ரு-மணிமுதல் இரவு க0-மணிவரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேச வித்தியாசாலையில் நடைபெற்றது. திவான்பகதூர் கனம் சா. ராம. மு. அ. அண்ணாமலைசெட்டியார் அவர்கள் தலைமை வகித்து நடத்தினார்கள். சிற்றுண்டி விருந்தும் உபந்யாச சபையும் வீணைக்கச்சேரியும் முறையே நடைபெற்றன. பல பண்டித மணிகளும் சில நகரவைசியர்களும் கொண்டாடிப்பேசினார்கள். ஏராளமானகூட்டம் இருந்தது. உள்ளூர் வீணை சோதரர்களால் வீணைக்கச்சேரி நடந்தது. தஞ்சாவூர் தனிஞமூர்த்தியும் மிருதங்கம் சக்கலையிலைங்காரும்முகர்சன் சிதாராமையரும் பக்கபலமாக இருந்து களப்படுத்தினார்கள். கொண்டாட்டத்திற்கு முன்னும் பின்னும் இடையும் தஞ்சை பாலகிருஷ்ணன் பாண்டுவாத்யகோஷம் குழுறிக்கர்ச்சித்துக் கொண்டாட்டத்தைக் கௌரவப்படுத்தியது. பலவூர் நகரத்தார்களும் விஜயம் செய்திருந்தனர். எல்லோரும் ஏகக்களிப்பாக இருந்தனர். நகரகிருந்தும் நடந்தது.

போதஜனக் கூட்டம்.

நேற்று மாலை கூ-மணிக்குமேல் கல்லுக்கட்டி மேல்கரையில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பெற்றது. அவ்வமயம், தமது வக்கீல் தொழிலை விட்டுத் தியாகியாகப் புறப்பட்டுத் தேசியத்தொண்டு புரிந்து வரும் ராணிப்பேட்டை ஸ்ரீமான் சக்கரவர்த்தி ஸ்ரீவத்ஸமையங்காரவர்களால், "அற்புத மனிதரும் ஆத்மசக்தியும், அவரது ஒத்துழையாமையின் தத்துவமும்" என்னும் அரிய விஷயம் உபந்யாசம் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. உபந்யாசகர் எழுந்து நவ்ரோஜிபேரிலும் திலகரிஷிபேரிலும் தாம் செய்திருந்த சங்கீதக்கட்டமைந்த பாடல்களைப்பாடி, தமது அரியகவையாகிய மகாத்மா பாடலைப்பாட ஆரம்பித்தவுடன், மழைவந்துவிட்டமைபற்றி, அப்பாடலின் பூர்த்தியுடன் சபையை நிறைவேற்றிப் பிறகு பிரசங்க பாகையில், அந்த உபந்யாசத்தை வைத்துக்கொள்வதாக ஏற்பாடுசெய்திருக்கிறது. அன்று பொது ஜனங்களின் வரவு மிகுதியும் எதிர்பார்க்கப்படுகின்றது என்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

தபால் வரவுத் தவறு.

திருச்சி மார்க்கம் நம் காரைக்குடிக்குவரும் தபால்கட்டு என்றுமே நித்யகண்டமும் பூர்ண ஆயுஸும் இருந்துகொண்டிருக்கிறது என்பது மிகையாகாது. அதிலும் சில காலங்களாக ஏற்படும் தாமதம் எழுதி முடிவதன்று. எதிர்பார்த்திருக்கும் அவசரக் கடிதங்களும் பொருள்களும் உரியகாலங்களிற்கிடைக்கப்பெறாமல் ஜனங்கள் படும் அவஸ்தை சொல்லிமுடியாது. தாமதத்தால் ஜனங்கட்கு அவஸ்தையுண்டாகும் என்பதை நிர்வாஹிகள் அறியாதவர்களா? நன்கு அறிந்தவர்களேயாயினும் இங்ஙனம் தாமதித்துக் கொண்டு வரும் குத்தகைவண்டிகளை நீக்கியேனும், வேறுஎவ்வகையிலேனும் ஜன சௌகர்யத்துக்கு ஏற்பத் தம் கடமையை யாற்றவேண்டுமென்று அந்நிர்வாஹிகள் முயன்றால், அது முடியாதகாரியமாகுமா? பிரஜைகள் வரிப்பணம் கொடுக்கத்தவறினால், அவர்களை அரசாங்கத்தார் படுத்தும் அவஸ்தைகளிற் சிறுபங்கேனும், எதிர்பார்த்தவைகள் கிடைக்கப்பெறாதபடி தாமதித்து அல்லலை விளைவிக்கும் அந்நிர்வாஹிகளை, யாற்றுதற்குச் சுதந்தரமாவது நியாயமாவது பிரஜைகட்கு அரசாங்கம் எங்கே அநுபவத்திற் கொடுத்திருக்கிறது? அன்றியும் இவ்விலாகா அரசாங்கத்தின் ஒரு வியாபாரத்துறையாகக் கவனிக்கப்பட்டு அம்முறையே நடத்தப்பட்டு வருகின்றது. பன்னிச்சொல்லிப் பயனில்லை. அரசாங்கத்தின் ஊழல் முறைகள் திருந்தினாலன்றிப் பிரஜைகட்கேனும் அரசாங்கத்துறைகளிலிருந்து ஆற்றும் நிர்வாஹிகட்கேனும் மனக்கலக்கமும் மனவேற்றுமையும்நீங்கப்போவதில்லை, அந்நிர்வாஹிகளைத் தூற்றுவதில் எமக்கு அபிப்பிராயமில்லையெனினும், அவர்களேனும் தக்கமுயற்சியெடுத்து, வரிகொடுத்து ஏமாந்து நிற்கும் பிரஜைகளின் சௌகரியத்துக்கு ஏற்ற உதவிகளைத் தம்மாற்கூடியவளவு செய்தல் வேண்டுமென்று மன்றாடிக்கேட்டுக்கொள்கிறோம்.

சம்பாவனை.

ஆத்தங்குடி முத்துப்பட்டணம் ஸ்ரீமான் சித. நாராயணன் செட்டியாரவர்கள், அவர்கள் மகன் காப்புக்கட்டுப் புதுமையில் நம் "ஊழியர் சங்கத்துக்கு" ரூபாய் ஐந்து சம்பாவனையாய் அனுப்பியுள்ளார்கள். அவர்கட்கு எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறோம் என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

தந்திச் செய்தி.

பினங்கு ஆனி மீ க0-உ

சென்னை உண்டியல்விலை நூற்றுஅறுபத்துநான்கு.
ஈயம் விலை நூற்றொன்பது
ரப்பர் விலை ஐம்பது.

இரங்கூன் ஆனி-மீ க0-உ

இயந்திர அரிசி பெரிது	சகூ—0—0
ஷ சிறிது	௯உ௯—0—0
மீடோன் அரிசி	௯ச௯—0—0
படகு நெல்	உக௯—0—0
இருப்புப்பாதை நெல்	உக0—0—0
கடலை	௩ச0—0—0
உழுந்து	ச00—0—0
தட்டைப்பயறு	௯௩0—0—0
காராமணி	௩எ0—0—0
துவரை	சச0—0—0
மொச்சை	௯௩0—0—0
அரிசிச்சோளம்	௬00—0—0
கோதுமை	ச௩0—0—0
பழையவெள்ளைமொச்சை	உச௯-0-0
புதிய வெள்ளைமொச்சை	உஅ0—0—0
கொத்துமலி	சச0—0—0
சிவப்பு மொச்சை	௩ச0—0—0
பவுன் விலை	கரு—௩—கூ
தங்கம்	௩எ—ரு—0
வெள்ளி	அ௯—0—0
உண்டியல்	ககூ௯—அ—0

பணம் நிதானம்.

சென்னை ஆனி-மீ அ-உ

பவுன் விலை ரூ	கரு—௩—0
வெள்ளி ரூபாயெடை	0—க௩—க

கப்பற் செய்தி.

எலங்கா என்னும்கப்பல்ஆனிமீ உ௩-உ யாகிய நேற்று சென்னை வந்து, இன்று சிங்கப்பூர் புறப்படுகின்றது.

நன்கொடை.

கல்லுப்பட்டி ஸ்ரீமான் ராம. செ. பழ. அழகப்ப செட்டியாரவர்கள், தமது தமையனார் ஸ்ரீமான் செல்லப்ப செட்டியாரவர்கள் குமாரன் சிரஞ்சீவி பழநியப்பனுக்கு வைகாசித் திங்கள் உ௩-ம் நாள் நடைபெற்ற விவாகத்தின் சம்பந்தமாக, நமது தனவைசிய ஊழியன் காரியாலயத்துக்கு ரூ. ௯—0—0 நன்கொடையாக அனுப்பியுள்ளார்கள். அதனை நாம் அன்புடன் ஏற்றுக்கொண்டு எமது நன்றியறிதலை யவர்கட்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

காரியஸ்தர்,
த. வை. ஊ. காரியாலயம்.

லோகமான்யர் ஜன்மதினம்.

கீழ்க்கண்ட அறிக்கை "பார்வெர்டு" பத்திரிகையில் வெளியாகியிருக்கின்றது. நேயர் கவனிக்க:

"நாட்டில் தற்சமயம்மனச்சோர்வும் குழப்பமும் ஏற்பட்டிருக்கின்றன. லோகமான்யரது பிறந்த தினம் வருகிற ஜூலைமாதம் உஉ-உ செவ்வாய்க்கிழமை வருகின்றது. லோகமான்யரது மரணத்துக்குப் பிறகு, ௩-வது முறையாக நாம் இத்தினத்தைக்கொண்டாடவேண்டியிருக்கிறதென்று நாங்கள் தற்சமயம் சந்தோஷமாகத் தெரிவித்துக்கொள்கிறோம். பகவான், திலகரது சிஷ்யர்களாகவும் நண்பர்களாகவும் அவரைப் பாராட்டுகின்றவர்களாகவும் இருக்கும் நம் நாட்டாரனைவரும் இப்புண்ணிய தினத்தை விருந்துகள் ஊர்வலங்கள் திலகரது கதா காலக்ஷேபங்கள் முதலியவற்றை நடத்திக் கொண்டாடவேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறோம். திலகர் வித்யாலயம் திலகர் தர்மசாலை முதலியவற்றை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொருஇடத்திலும் திலகர்கோயிலைக் கட்டவேண்டும். புதியபத்திரிகைகளையும் திலகரதுபெயரால் புதிய புத்தகசாலைகளையும் ஆரம்பித்து நடத்தல்வேண்டும். இம்மாதிரிகளெல்லாம் செய்து திலக பகவானுக்குத் தக்க ஞாபகச் சின்னங்களை யேற்படுத்த வேண்டுமென்றும் நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்" என்று கனம் ஜி எஸ். கபார்தே, ஸ்ரீமான்கள் எஸ். பி. திலகர் (லோகமான்யர் குமாரர்) ஏ. பி. காஸிபுரி, எஸ். என். ஹாஷிமி, ஜி சாஸ்திரி முதலியவர்கள் எழுதியிருக்கின்றார்கள்.

குறிப்பு:—அவதார புருஷராக வந்து தியாகத்துடனும் சுதந்தரத்துடனும் வீரத்துடனும் தேசத்தொண்டுசெய்து, இந்தியரென்பார் எல்லோர்க்கும் சுதந்தரதாகத்தை யெழுப்பிவிட்டு, "மறுபடியும் நான் வேறு உருவில் வருவேன்" என்று லோகாந்தரப் பிரயாண சமயத்தில் வாக்களித்து நமது ஊனக் கண்ணினின்றும் மறைந்து ஞானக்கண்ணுக்கும் மனத்திற்கும் உயர்விழியாகவும் உயிர்ப்பொருளாகவும் இருக்கும் திலக மஹரிஷியின் ஞாபகார்த்தம் அந்நாளைநன்னாளாக எல்லோரும் கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறார்கள். லோகமான்யரது குணநிசயங்களைப் பற்றிப் பின்னர் ஒரு வாரத்தில் எழுதுவோம். — ஆசிரியர்.

தபால்தலைகள் அச்சடித்தல்.

நமது இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் எ0-டன் நிறையுள்ள தபால்தலைகளும் கச்சேரி நாணயத்தாள்களும் (கோர்ட் பீஸ் பில்கள்) இறக்குமதி செய்யப்படுகின்றன. ௯00-டன் நிறையுள்ள தபால்தலை அச்சிட்ட அட்டைகளும் (கார்டுகளும்) உ௯-டன் நிறையுள்ள தபால்தலை அச்சிட்ட கூடுகளும் (கவர்களும்) ச00 முதல் ௯00-டன் வரை நிறையுள்ள பத்திரத்தாள்களும் அதே நிறையுள்ள முத்திரைக் கடிதங்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இது போதாதென்று ஏராளமான காகிதநாணயங்களும் (நோட்டுகளும்) லண்டனில் அச்சிட்டு வருகின்றன. இந்திய அரசாங்கத்தார் இந்தியாவில் செய்யப்படும்கடிதங்களைக்கொண்டு இந்தத் தபால்களையும் நாணயத்தாள்களையும் அச்சடிக்கக் கூடுமா என்பதுபற்றி யோசித்து வந்தனர். இது விஷயமாகப் பரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்பட்ட கூட்டத்தாரால் இந்த வேலைகள் புதிய இந்திய அரசாங்க அச்சுக்கூடத்தில் செய்யப்பட வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர்.

டிலாரு என்னும் ஆங்கில அச்சுக்கூடம் இந்தத் தபால் தலைகளை யச்சடிக்கப் பெற்றிருந்த குத்தகை இவ்வாண்டுடன் முடிவெய்துகின்றது. காகித நாணயங்களை யச்சடிக்க இங்கிலாந்துபாங்கி பெற்ற குத்தகை அடுத்த வருஷம் முடிவெய்துகின்றது. இந்திய அரசாங்கத்தார் டில்லியில் தபால் தலைகளையும் காகித நாணயங்களையும் அச்சடிக்க ஏற்பாடுசெய்து, சட்டசபை யங்கத்தினர்களைச் சென்ற பிப்ரவரி மாதம், அவை வேலை செய்யும் முறையைப் பார்க்க அழைத்தனர். அன்று புழுதியதிகமாக அடித்து வேலையைப் பாழாக்கிவிட்டபடியால், தற்போது நாஸிக்கில் வேலையை நடத்த ஏற்பாடு செய்யப்படுகின்றது. ககூஉ௯-ம் வருஷம் நவம்பர் மாதம் வேலை நடத்த ஆரம்பமாகும். அரசாங்கத்தார் வசம் இரண்டு ஆண்டுகட்கு வேண்டிய தபால் தலைகள் இருப்பதால், ஒரு வருஷ தாமதத்தால் தட்டு ஏற்பட்டுவிடாது. ககூஉ௯-ம் வருஷ முடிவில் காகித நாணயங்கள் அச்சிடவும் ஏற்பாடு செய்யப்படும் என்று பத்திரிகைகளால் தெரியவருகின்றது.

மதிப்புரை.

காந்தி மோதிரம்.

இப் பொருளொன்று நம்மிடம் மதிப்புரைக்காக வந்திருக்கின்றது. இது கட்டடவேலை யழகாகவும் மகாத்மா காந்தியடிகளது சிரம் போன்றதோருருவொன்று அமைக்கப்பெற்றுள்ளதாகவும் இருக்கின்றது. இது இவ்வகையில் எண் ௩- தரமுள்ள மோதிரமென்று குறிக்கப் பட்டிருக்கின்றது. இதன்விலை ரூ ௩—0—0; முதல் எண்தரம் ரூ க௯-க்கும், உ-எண்தரம் ரூ க0—க்கும் விற்கிறார்களென்பதும் கண்டிருக்கின்றது. நமக்கு வந்திருக்கும் ௩-எண் தரமுள்ள இம்மோதிரம் தங்க மோதிரம் என்று குறிக்கப்பட்டிருக்கின்றது; நாங்கள் பரிசோதித்துப் பார்த்ததில், ஒன்றே கால் விராகனிடைநிறையுள்ள இம் மோதிரத்தில் காலேவீசம் தாமிரம் கலந்திருப்பதாகத் தெரியவருகின்றது. மற்ற இரண்டும் விலையேறப்பெற்றவை யாகையால், அவற்றில் தாமிர அளவு குறைந்திருந்தாலுமிருக்கலாம். வேலை யற்புதமாகவும் காந்திசின்னமமைந்துள்ளதாகவு மிருப்பதால் இம்முறைக்கு ஊக்கமளித் துதவல் கூடுவதே யாகும். இம் முறையிலேயே, அவர்களிடம், காந்தியடிகளின் சிரவுருவ மமைந்த தங்கம் வெள்ளி பௌண்டன் பேனாக்களும் கழுத்து கைச்சட்டைக்குமிழ் (புத்தான்) களும் செருகூசி (சேப்டிபின்) களும் பிறவும் கிடைக்குமென்று தெரிகின்றது. இவர்கள் இம்முறையி லிறங்கியுழைக்கின்றமைக்கு யாம் சந்தோஷம் கொள்கிறோம். இவர்கள் அதிக லாபம் கருதாமலும் மகாத்மாவின் பெருமையைக் கெடுக்காமலும் பொதுஜனங்களேமாற்றமடையாத வழியிலும் தங்கள் வியாபாரத்தை நடத்திச் செல்வார்களென்று எதிர்பார்க்கிறோம். விலாசம், "பான்ஸி ஜுவெல்லரி கம்பெனி; ஷண் முகநாதபுரம் போஸ்டு, ராமநாதபுரம் ஜில்லா."

பரதன்.

இது ஒருமாதாந்தப்பத்திரிகை. இரங்கூனிலிருந்து ரத்தாக்ஷி வைகாசித் திங்கள் முதல் வெளியாகின்றது. டிம்மி அ-பக்கப் பாரஅளவில் மாதம் ௩, ௬-பாரங்கள்

கொண்டு வெளிவருமென்று தெரி கின்றது. தேசம் பாஷை மதம் இவற்றை முன்னேப்பாகக்கொண்டு உழைக்க முன்வந்திருக்கின்றது. தமிழபிமானிகள் இதனே யாதரிக்க வேண்டுகிறோம். வருடசந்தா ரூ. உ-அ-0. விலாசம்:—"பரதன் பத்திரிகாலயம், ௬௩, தாம்ஸன்வீதி இரங்கூன்."

* * *

சதானந்தபோதினி.

இதுவும் ஒரு மாதாந்தத்தமிழ்ப் பத்திரிகை. மாயவரத்திலிருந்து சித்திரைமாதம் முதல் வெளியாகின்றது. முதலாண்டு முதற்பத்திரிகை வரப்பெற்ருேம். இது தமிழ்ப்பாஷைக்கும் தமிழ்நாட்டிக்குமுரிய பல துறைகளிலும் உழைத்து வருமென்று தெரிகின்றது. இதன் ஆசிரியர், ஸ்ரீமான் சு. கு. கோவிந்தசாமிபிள்ளையென்னும்நண்பர். இதன் ஆண்டுச்சந்தா ரூபாய் ஒன்றே. வேண்டுவோர், "சதானந்தபோதினி பத்திரிகாலயம், மாயவரம். என்றெழுதிப் பெறுக.

விளம்பரம்.

வியாச்சியத்தை

பைசல் செய்வதற்காக சம்மன்.

(இந்தியன் ஸிவில்ப்ரொஸீஜர்கோட் ௫-வது ஆர்டரின் (க) வது, (௫)வது விதிகளின் பிரகாரம்)

இரங்கூன் ஸ்மால்காஸ் கோர்ட்டின்

௧௯௨௩-ஹ்த்திய அ௦௪௯-நீர்

வியாஜ்ஜியம்.

வாதி.

இரங்கூன் மொகல் தெரு அ௯-நிர் இலக்கமிட்டகட்டிடத்தில் லேவாதேவி தொழில் செய்கின்ற எஸ். ஆர். எம். வி. டி. எஸ். எஸ். பி. ஏ. செட்டியார்க் கடைக்காக மேற்கண்ட கடையின் ஏஜண்டு வீரப்பசெட்டியார்.

பிரதிவாதிகள்.

(க) புதுக்கோட்டை சமஸ்தானம் குருவிக் கொண்ண்டான்பட்டி கிராமத்திலிருக்கும் வீரப்பசெட்டியார் மகன் காசிச்செட்டியார்என்றழைக்கிறபழனியப்ப செட்டியார். (௨) புதுக்கோட்டைசமஸ்தானம்இராங்கியத்திலிருக்கும் குஞ்சான்செட்டியார்மகன் சுப்பிரமணியஞ்செட்டியார் என்றழைக்கின்ற பழனியப்பசெட்டியார் பிரதிவாதிகளுக்கு தெரிவிப்பதாவது ஷை வாதி ஒரு "அண்டிமாண்ட்" வகையில் ரூ ௫அஎ-க௪-0 தனக்குச் சேரவேண்டுமென்று உங்கள் பேரில் வியாச்சியந் தொடர்ந்திருப்பதால் நீங்கள் நேரிலாவது அல்லது தக்கபடி அனுமதிபெற்று இவ்வியாச்சியத்தின் விஷயங்களே அறிவிக்கப்பெற்றவரும் ஷை வியாச்சியத்தின் சம்பந்தமாய் பிரதானமான சகல கேள்விகளுக்கும் பதில்-அளிக்கக்கூடிய இக்கோர்ட்டின் லாயர் மூலமாவது அல்லது ஷை கேள்விகளுக்கு பதில் அளிக்கக்கூடிய மற்று எவ்ராவது அன்னவருடன் இக்கோர்ட்டிற்குவந்து மேற்கண்டவாதிக்கு பதில் சொல்லுவதற்காக நாளது ௧௯௨௪-ம் வருஷம் ஜூலை௴ ௨௫-ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் ௧௧-மணிக்கு ஆஜராகும்படி இதனுல் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இவ்வியாச்சியத்தை முடிவாக பைசல் செய்யும்பொருட்டு நீங்கள் ஆஜராவதற்கு ஷை நாளே நியமித்திருப்பதால் அந்த நாளில் உங்களுடைய சாட்சிகள் அனைவரையும் ஆஜர்படுத்த தயாராயிருக்க வேண்டுமென்றும் முற்கூறிய நாளில் நீங்கள் ஆஜராகத்தவறினுல் இவ்வியாச்சியத்தை உங்கள் ஆஜரின்றியே செவியுற்று தீர்மானிக்கப்படுமென்பதை இதனுல் உங்களுக்கு அறிக்கை செய்யப்படுகிறது.

வாதி பரிசோதிக்க வேண்டுகிற ... ... யும் உங்களுடைய எதிர் வாதத்திற்கு ஆதாரவானதென்று நீங்கள் உத்தேசித்துள்ள எவ்வித தஸ்தாவேஜிகளேயும் உங்களுடன் கொண்டுவரவும் அல்லது உங்களுடைய லாயர் மூலமாய் அனுப்பிவைக்கவும்.

௧௯௨௪-ம் வருஷம் ... ... மாதம் ... ... தேதி இக்கோர்ட்டு முகருடனும் எனது கையெழுத்துடனும் அளிக்கப்பட்டது.

(ஒப்பம்) ... ...
நியாயாதிபதி.

பத்து லெக்ஷம்.

ரூபாய்வரை எந்தத் தொகைக்கும் எந்தச் செல்வானமுள்ள தொகைக்கும் மிகவிரைவில் மிகச்சுலபமாக வட்டி பார்க்கவும் வட்டிச்சிட்டை தயாரிக்கவும் சரிபார்க்கவும் புதியமாதிரியில் வட்டிப் பிரகாசிகை, யென்ற புஸ்தகம் கணித்திருக்கிறது. இதில் நாள் க-முதல் ௩௨-வரைக்கும் மாதராசிகாலணு முதல் க௨-ரூபாய் வரை வட்டி வீதப்படி வட்டி—சரிநாள் வட்டி தவணை வட்டி பாங்கிவட்டி அசல் ரெட்டிப்புச் சம்பளம் முதலியவைகளேயும் எளிதில் பார்த்துக்கொள்ளலாம். கணித நிபுணர்களால் நன்கு பரிசோதிக்கப் பெற்றிருக்கின்றது. கால் பைசா கூட வட்டிவிடாது பிரபல லேவாதேவிக்காரர்கள்ளான கனம் ஸர் அண்ணமலை செட்டியாரவர்கள் ராவ்பகதூர் சோமசுந்தரம் செட்டியாரவர்கள் முதலியதனவைசியப் பிரமுகர்களாலும் இராமனுதபுரம் ஜில்லா கலெக்டரவர்கள் முதலிய கவர்ன்மெண்டியோர்தா உத்யோகஸ்தர்களாலும் நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றிருக்கின்றது. விலை ரூ. ௩.

தபார்கூலி இனும்.

நா. சு. லெக்ஷ்மணய்யர்,
வெள்ளையனூருணி, தேவகோட்டை.

இதனுல் சகல கனதனவான்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில் எங்களிடம் கனத்த இரும்புத் தகட்டினுல் செய்து தயாராயிருக்கும் கெட்டிஇரும்புப் பெட்டிகள் சாசமாயும் காலக்கிரய விலைப்படி கொடுக்கிறோம். ஷை பெட்டிகள் க000-வருஷத்துக்கு மேல் ஆண்டுவரும் அழியாதபொருள். மிகுந்தபலமுடைய ஆங்கில்கள்வைத்து குப்பை ஆணிகளால் நெருக்கமாய் ரிவிட் செய்யப்பட்டிருக்கிறது. நெருப்பு கன்னிங்களவு முதலானதும் கிஞ்சித்தேனும் அணுகமாட்டாது. வர்ணங்கள் விதம் விதமாகயிருக்கும். வேண்டுபவர்கள் அடியில் கண்டவிலாசத்துக்கு எழுதி யனுப்பினுல் செய்தனுப்புகிறோம்.

மு. அ. அண்டு அ. நா. அ. இராமசாமிச் செட்டியார & கம்பேனி,
இரும்புப்பெட்டி உற்பத்திச்சாலை நெ 2/70 பிருட்வே மதராஸ்

இராமநாதபுரம்ஜில்லா கண்டனூர் அ. நா. அ. ராமசாமிசெட்டியார் வீட்டிலும், ரெங்கூன் வயி. ராம. அரு. கடையிலும், ஈப்போ அ. நா. அ. கடையிலும் ஆர்டர் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம்.

சா. லெ. செ மீனாக்ஷிசோடா S. L. S.

ஜெயம்! ஜெயம்!!

எங்கும்

"சா. லெ. செ"

சோடா, கோலா, கலர்களே

ஜெயம்.

மீனாக்ஷி சோடா வாட்டர்

கம்பேனி,

செஞ்சை காரைக்குடி.

விளம்பரம்.

இராமனுதபுரம் ஜில்லா கோட்டையூர் அழகாபுரியிலிருக்கும் ராம. சு. மு. அகப்பசெட்டியார் சம்சாரம் லெக்ஷிமிஆச்சி சகலமான ஜெனங்களுக்கும் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால்:—

சுமார் உஅ-வயதுள்ள எனது மூத்த குமாரனுகிய அழகப்பன் என்ற சுப்பிரமணியன்என்பவர் சில காலமாக குடும்பத்தில் ஒத்துழையில்லாமல் கெட்ட நடவடிக்கைகளில் பிரவேசித்துக்கொண்டும் பல துன்மார்க்கர்களுடன் சேர்ந்துகொண்டும் தன்ஸ்வாதீனமில்லாமல் க-க்கு-க0 ஆக எழுதிக்கொடுத்து கடன்கள் வாங்கி அனுவசியமான செலவுகள் செய்து வருகிறார்.

எங்களிடமிருக்கும் ஸ்தாவரஜங்கமசொத்துக்கள்பூராவும் எங்களுடைய சுயார்ஜிதமானதாகையால் ஷைபானுக்கு எவ்விதபாத்தியமும் இந்தச்சொத்தில்இல்லையென்பதை தெரிவிக்கிறோம். குடும்பசம்பந்தமாக ஷையாருக்கு கடன்வாங்க வேண்டிய அவசியமும்கிடையாது. ஷைபான் காலியாய்திரிந்துகொண்டும்பிரதிப் பிரயோஜனமில்லாமல் தஸ்தாவேஜிகள்பிறருக்கு எழுதிக்கொடுத்துவருவதாகவும் தெரிகிறது. ஷையாருக்கு எவ்விதகடன்கள் வாங்கவாவது எங்களுக்கு வரவேண்டியதுகளேவசூலிக்கவாவதுஎந்தவிதமான தஸ்தாவேஜிகள் எழுதிக்கொடுக்கவாவது குடும்பச்சொத்துக்களே பாராதீனம்செய்யவாவது யாதொருபாத்தியதையும்கிடையாது. ஷையார் சுவயமான ஸ்வாதீனமில்லாமல்இருந்துவருகிறார். ஆதலால் ஷையானுக்குஇதுவரையில் கடன் கொடுத்து எவ்விததஸ்தவேஜிகள் ஏற்படுத்தி யிருந்தாலும் அல்லது இனிமேல் கொடுத்து ஏற்படுத்தினுலும் எங்கள் சொத்துக்களேயாவது, குடும்பத்தாரையாவது ஷை கடன்கள் கட்டுப்படுத்தமாட்டாதென்பதையும் கடன் கொடுத்தவர்கள் கொடுத்ததுகைகளே பூராவும் இழந்துவிடநேரிடு மென்பதையும் இதன்மூலம் சகலருக்கும் கண்டிப்பாய்தெரிவித்துக்கொள்கிறேன்.

ராம.சு.மு.அள. லெக்ஷிமிஆச்சி.

,,ரக்தாட்சி ஆண்டு"

தனவைசிய ஊழியன் தினசரி.

விலை ரூ க—0—0
தபாற்கூலி வேறு.

சொற்பப் பிரதிகளே மீதமிருக்கின்றன.

காரியஸ்தர்.

தனவைசிய ஊழியன் அச்சுக்கூடம்
காரைக்குடி.

குறைந்தவிலை!! அதனமானது !!! உயர்ந்தவேலை

ராஜூ'ஸ் தமிழ் அச்சு எழுத்துப் பெட்டி

செட் நெ-௪ விலை ரூ ௬—௧௨—0.

இந்தத் தமிழ் அச்சு எழுத்துப் பெட்டிகள்ஒவ்வொருவரிடமும் அவசியமாயிருக்கவேண்டியது, ஏனெனில், தங்களுக்குத்தேவையான விலாசங்கள், லேபில்கள் முதலியவைகளேத் தாங்களே தங்களுக்கு வேண்டிய மெஷினில் அடுக்கிக்கொண்டு, கார்டு, கவர், கடித முதலியவைகளில் தமிழில் தாங்களே அச்சிட்டுக்கொள்ளலாம். இந்த எழுத்துக்களே உறுதியான அச்சு பீஸ் வெட்டை நயத்தால், தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப்படத்தில் கண்டபடி (க) அ. ராஜூபிள்ளை அண்டுபிரதர். இம்மாதிரி தமிழ்எழுத்துகளும்,தமிழ்எண்களும், இங்கிலீஷ் நெம்பர்களும், ஸ்பேஸ்களும் உள்பட ௫00 எழுத்துகள் அடங்கிய தகரப் பெட்டி க-ம், (௨) மைபுட்டி க-ம், (௩) பிரஷ் க-ம், (௪) ஷை எழுத்துக்களே இரண்டே முக்கால் அங்குல நீளம் அடுக்கி அச்சிட்டுக் கொள்ளக்கூடியதும் நான்கு வரிகளே யுடைய அமானு ஸ்குருகள் அமைத்த டைப்ஹோல்டர் பிடி க-ம், (௫) எழுத்துகளே எடுக்கும் சிராவணம் க-ம், (௬) எழுத்துக்களே மட்டமாகத் தட்டும் மரப்பலகை க-ம், (எ)மையைத் தயாராக அமைத்திருக்கும் வயலெட் ஸெல்ப் இங்கிபாட் க-ம், (அ) ஒரு லைன் எழுத்துகளே அடுக்கக்கூடிய கிளிப் ஹோல்டர் க-ம் ஆக மொத்த சாமான்கள் அடங்கிய தமிழ் அச்சு எழுத்துப்பெட்டி செ-௪. செட் க-க்கு விலை ரூபா ௬—௧௨—0. வி. பி. தபால்சார்ஜ் வேறு.

விலாசம்:—அ. இராஜூபிள்ளை அண்டுபிரதர்,
நெ. ௧௧, பஜார் ரோட், நூனை, மதராஸ்.

பெங்களூர்.

விலைசரஸம். உத்திரவாதம்.

நல்லசாயம்.

அசல் பட்டுப்புடவைகள், சித்தாடைகள் பாவாடைகள் ௭-முழம் முதல் ௧௨-வரை உள்ளது. இதற்குரீனமானது ஆர்டரின்பேரில்சப்ளைசெய்வோம். நாங்களே-நேரில்வேலை செய்கிறவர்கள். எங்கள் சொந்தத்தறியாகச்சே விலை சரசம். சாயம் கியாரண்டி. மாதிரிபார்த்த ஆர்டர்களே அட்வான்ஸுடன் எதிர் பார்க்கிறோம். வெளியூர்ச் சில்லரை ஆர்டர்களே வி.பி. செய்வதுடன்,பெரிய ஆர்டர்கள் செய்தால் உடனே எங்கள் ஏஜண்டை அனுப்புவோம். மற்றைய ஊர்ச் சரக்குகளேப் பெங்களூர் உருப்படி என்று கொடுப்பதைவாங்கி ஏமாறுதேயுங்கள். விலை உயர்ந்தவை ஆர்டரின்பேரில் தயார் செய்யப்படும்.

குறிப்பு:கலியாணம்முதலிய விசேஷங்களுக்குப் பழங்கள்சப்ளைசெய்யப்படும்.

தந்தி அட்ரஸ்:—கண்டாங்கி, பெங்களூர்சிட்டி
(Tel:–"Kandangi" Bangalore City) தங்கள் உண்மையுள்ள
(C. K.) சீ. கே. உச்சப்பா அண்டு பிரதர்ஸ்
சம்பக லெக்ஷ்மிஹால் சிக்பேட்டை பெங்களூர் சிட்டி.

தனவைசிய ஊழியன் சந்தா விபரம்.

உள்நாட்டிற்கு வருஷ சந்தா	ரூ. ௫	0	0
வெளிநாட்டிற்கு ஷை ௬-0-0 தனிப்பிரதி க-க்கு	0	௨	0

விளம்பரம்.

மாதம் ஒன்றுக்குப் பத்தி க-க்கு	ரூ ௨0
ஷை பத்தி அரைக்கு	ரூ ௧௧
ஷை கால் பத்திக்கு	ரூ ௬
ஷை அங்குலம் ஒன்றுக்கு	ரூ ௨

மூன்று மாதங்கள் விளம்பரஞ் செய்வோர்க்கு மாதம் ஒன்றுக்கு பத்தி ஒன்றுக்கு ரூ. ௧எ-ஆகவும் அரைப்பத்திக்கு ரூ. ௯-ஆகவும், கால்பத்திக்கு ரூ. ௫-ஆகவும் போடப்படும்.

ஆறு மாதங்களும் அதிற்கதிகமாகவும் விளம்பரம் செய்வோர்க்கு மாதம் ஒன்றுக்கு பத்தி க-க்கு ரூ. ௧௫-வீதமும் அரைப்பத்திக்கு ரூ. அ-வீதமும், கால் பத்திக்கு ரூ. ௪-வீதமும் போடப்படும்.

ஒருபக்கம் விளம்பரம் செய்ய க-மாதத்திற்கு	ரூ. ௫0
ஷை ஒரு வாரத்திற்கு	ரூ. ௧௫

"தனவைசிய ஊழியன்" ஆலயம்,
காரைக்குடி.

நோட்டீஸ்.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றால் என் கட்சிக்காரர் வெள்ளையப்பசெட்டியாருடைய மகன் கக-ஒ வயதுள்ள மைனர் காசியாகிய பெரியகருப்பன் செட்டியாரைச் சிலர் கெட்ட சகவாசத்தில் பழக்கி விட்டு ஷை தன் மாா்க்கச் செலவுக்காகச் சிற்சில சமயங்களில் சொல்பம் மட்டும் தொகை கொடுத்து ஷை யானிடமிருந்து ஏராளமானதொகைக்கு ஆதாவுகள் ஏற்படுத்திக்கொண்டிருப்பதாகத் தெரிவதில் ஷையான் மைனராக யிருந்திருப்பதில் அந்தக்காலத்தில் ஷை யானிடமிருந்து ஆதாவுகள் எழுதி வாங்கி யிருப்பவர்களுக்கு அவனிடமிருந்து கூட யாதொரு பரிகாரமும் கிடைக்கமாட்டாதென்பதையும் இனிமேலும் ஷையானுக்குக் கடன்வாங்க வேண்டிய அவசியமில்லாதபடியாலும் ஷையானுக்கு எவரும் கடன் கொடுக்கவாவது அவனிடமிருந்து ஆதாவுகள் எழுதி வாங்கவாவது கூடாதென்பதையும் எல்லாரும் இதன் மூலம் அறியவும்.

நேமத்தாம்பட்டி மு. சி. ராம. பெ.
வெள்ளையப்ப செட்டியாருக்காக
வக்கீல் ஆர். ஸ்ரீநிவாசய்யங்கார்
சிவகங்கை.

தபால் தந்திமித்திரன்.

மூன்றும்பதிப்பு அச்சில் தயாராகிக் கொண்டிருக்கிறது. கூடியசீக்கிரம் வெளிவரும்.

முதல்இரண்டாம்பதிப்பைப்பார்க்கிலும் அநேக விஷயங்கள் புதிதாய்ச் சேர்க்கப் பட்டிருக்கிறதுமன்றி ருத்ரோத்காரி வருடம் வரை தவணைவட்டி நடப்பு வட்டிகளும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. வர்த்தகர்களுக்கு இப்புத்தகம் அவசியம் வேண்டற்பாலது. சொற்ப பிரதிகளே தயாராகிக்கொண்டிருக்கிறபடியால் வேண்டுவோர் முன்னதாகவே ஆர்டர் அனுப்பி வைக்கும்படி செய்ய வேண்டியது.

இதன் விலை ரூ உ-0-0

வி. பி. சார்ஜ்பிரத்தியேகம்
வைசியநேசன்
தபால் பெட்டிநேர் உகூக
இரங்கோன்.

எங்களிடம் நயம்மரியாப்புழுங்கலரிசிச்சரிசி துவரம்பருப்பு உழுந்தப்பருப்பு கடலைப் பருப்புகளும் சாதகமானவிலையில் கிடைக்கும்.

ராய. சொக்கலிங்கனால் காரைக்குடி தனவைசியஊழியன் அச்சியந்திரசாலையில் அச்சியற்றிப்பிரசுரஞ்செய்யப் பெற்றது.

END OF ISSUE